தானென்றநவசித்தர்சோடாகோடிதாநடாமநிர்மடாசித்தர் கூட்டங்கோ னென்றமலையுள் ளேவிருட்சமூலி குற்றமில்லைவே தையுந்தானனேகஞ்செய்வார் வானென்ற தேவரொடுமுனிவர்சி த்தர்வருகிறதும்போகிறதுங்காணச் செய்யுமானென்றதேவரொ டுதவமேசெய்தோர்மைந்தனேசித்திமுத்திபெறுவர்தானோ௱௬௪

வரக்கிரி.

தானென்றவராக்கிரிச்சருவில் மைந்தா தடவானவோடைக ளும்ஆறுதோறும்-தேனென்ற அருவியுடமண்ணுங் கல்லுந்தெரி யாமல்தங்கமாயிருக்குமப்பா- பானென்ற மூலிகையால் வேதயா கும்பட்டணமண்ணுங்கல் முதலாய்த்தங்கமாகும் கோனென்றசி லைபோலேகிடக்கும்பாருகொற்றவனேயதியார்களாருந்தானே ()

சதுரகிரி

தானான சதுரகிரிமேலே யப்பாதயவான*உதகமொன்றுஇருக்குதப்பாமானைக்*காஞ்சனமாங்காயசித்திமைந்தனேஅஷ்டசித்திகெவுனசித்தி கோனானதேவர் முதல்கணங்கள்யா வுங்கூபிட்டால்கேள்விவந்துகேட்கும்பாரு வானானசித்தருடகூட்டமெத்த வளமானசஞ்சீவிமூலியுண்டே (௱௬௬)

*உதகம்-சலம்.

*காஞ்சனம்-பொன்

உண்டானமூலியைத்தான் குகையினுள்ளே ஒளித்துவைத்தார்சித்தரெல்லாம்வெளியாமென்று-பாண்டானசித்தருக்குமூலியிட்டும்பாவிகட்குங்காமிகட்குங்கிட்டுமோசொல்-செண்டானபூவுலகில் மனுடரெல்லாஞ் செத்தவர்களெழுந் திருப்பார்கிடங்கொள்ளாதுகொண்டானவிநியாளிவந்தானுகில் கூப்பிட்டுத்தான்கொடுப்பார்சித்தர்தானே. (௱௬௭)

இருமலுக்குலேகியம்

தானானலேகியந்தான் சொல்லக்கேளுதருவான*கரிப்பான் சாற்படிதானென்று பானானகாணிச்சாற்நாழியொன்றுபண்பாக சங்கம்பழச்சாறுநாழிவானான தேன்படிதானையுங் கூட்டிவளமானஆவினெய்ப்படிக்கால்சேர்த்து-கோனானதிப்பிலியு மிளகுசுக்குகொடிதானசிற்றரத்தைகடுக்காய்த்தானே (௱௬௮)

*கரிப்பான்சாற்கையாந்தரை

தானப்பாவகைக்குவகைவிராகனைந்து தான்பெரித்துவடிக்கட்டிலேகியமாய்க்கண்டு- வானப்பாநெல்லிக் காயளவாய்க்கொள்ளவளமாகஈராறுநாளுக்குள்ளேகோனப்பாஅந்திசந்திகொண்டபோதுகொடிதானஇருமலெல்லாங்குடியேபோகும்-நானப்பாபத்தியந்தானில்லையையாநாயகனேலேகியந்தான்மேருவென்னே.

சூலைவாயுமேகத்துக்குத்தயிலம்

என்னவே தயிலமொன்று சொல்லக்கேளு இதமான கொடிவேலிமூலிதானும்-பன்ன வேதுலாமனைதாடினித்துப்போட்டுபண்பானஆவின்பட்டைசங்கவேரும்- தன்னவேவகைக்குவகைதுலாமேகால்தான்நாயகனேஇத்துடனேகூடச்சேர்த்துஅன்னவேதூணிநீர்விட்டுக்காய்ச்சு அப்பனே பெட்டொன்றுக்குறுக்கிவாங்கே. (௧௭௰)

வாங்கியேஎள்ளெண்ணெய் நாழிவாருவகையானமிளகுபலமரைதுப்போட்டு-தாங்கியே பசுவின்வெண்ணெய்பலந்தானென்றுதயவாக வேப்பெண்ணெய்படிக்கால்வாரு- பாங்கியேமெழுகுபதந்தனில்வடித்துபண்பாக முழுகிவரசூலையேகும்-தூங்கியே திரியாதே மேகமெல்லாந்துடித்து விழுந்தேபோடிமெதிர்நில்லாதே (௧௭௧)

### பிரமேகத்துக்கு எண்ணெய்.

நில்லாதபிரமேகந்தீரவேண்டில் நிட்சயமாய்த் தேங்காய்ப்
பால்படிதானென்று-வலமானபொடுதலைச்சாற் படிதானென்று
வளமானப்பிரமிசாற்படிதானென்று-நல்லாகளரித்திருந்து என்
ணெய்வாங்கிநாயகனேமூன்றுநாளாறுவேளைசொல்லாகக் குடித்
தவுடன் பிரமியங்கள்சிறப்பாகத்திருமடாதிண்ணந்தானே. ()

திண்ணமாய்ப்பத்தியந்தானாறுநாளுஞ்சிறப்பான ஆவின்பா
லாகுமல்லால் - வண்ணமாய்மற்றொன்றுமாகாதப்பா வளமாகவ
மூநாள்தலையைமூழ்கு-உண்ணமாஞ்சிப்பிரமியம்ரத்தப்பிரமியம்
உத்தமனேதீருமடாஇந்தஎண்ணெய் - எண்ணமொன்றுமில்லைய
டா விசனம்போகும்என்னசொல்வேனெண்ணெயுடவீரந்தானே

### சுகபேதிசூரணம்.

வீரந்தான்பேதியொன்றுசொல்லக்கேளு விதமான சிவே
தைவேர்பசுவின்பாலில்-சீரந்தான்மிதக்கவிட்டுச் சுண்டக்காய்ச்
சிதிரமாக உலர்த்தியதைதூளாய்ப்பண்ணி - வாரந்தான்சரியெ
டைசர்க்கரையுஞ்சேர்த்துவளமாகஏலமது அரைக்கால்சேர்த்து
பாரந்தான்வெருகடிதூள்வெந்நீரிற்கொள் * பள்ளநற்சீதமுதக்க
ழிந்துபோமே. (௱எச)

*பள்ளநற்-திசைச்சொல்குறிப்பு

### விற்புருதிக்குமருந்து

போமேநீவிற்புருதிவந்தபேர்க்குப்பொங்கமுடன் சல்லிவே
ர்க்கிழங்குவாங்கி-தாமேநீ கழுவியதைதோலைப்போக்கிதயவாக
நாலுபலமொருவேளைக்குவாமேநீகம்பு மாவனைப்படியும்போட்
டுவனமாகக்களிக்கிண்டிஅந்திசந்தி- ஆமேநீபசுவின்நெய்க்கருப்
புக்கட்டிஅடவாகமூன்றுநாள்கொண்டிடாயே (௱எரு)

*சல்லிவேர்-தண்ணீர்மிட்டான்

கொண்டபின்புமறுபத்தியமூன்றுநாளும்குணமாகவெந்நீரு
ம்அன்னமாகுங்-கண்டபின்பு ஏழாநாள்சலத்தை வாருகருவான
விற்புருதிக்கரைந்துப்போச்சு-அண்ட பின்புசின்னிபொடுதலையி
ன்சாறுஅப்பனேபத்தியந்தானிந்தபாகம்- உண்டிடவேஅரையா
ப்புவிற்புருதிதீரும்உத்தமனேமேகசலக்கட்டிப்போமே (௱எசா)

### மருந்திட்டுக்குமுறிவு-சத்தியாக

போமேநீமருந்திடுவாந்தியாகப்பொங்கமுடன்கரிப்பான்சா
ர்தன்னைவாங்கி-தாமே நீயிருப்புடையப்படி யிலப்பாதாழ்வாகக்
காற்படிச்சார்படியில்தானும்வாமேநீஎலுமிச்சம்பழச்சார்நேரோ
வளமாகஅந்திசந்திப்படியில்விட்டு-ஆமேநீயுதையாதிதுடங்குமு
ன்னேஅப்பனேஉங்களுக்குக்கொடுத்திடாயே. (௱எஎ)

கொடுத்திடவேவாங்கியதுகாணும்பாருகொடிதான மருந்தீ
டெல்லாம்வீழும்-அடுத்திடவேவாங்கியது அதிகங்கண்டால் அ
ட்வாகப்பச்சரிசிபருப்பினோடுகெடுத்திட வேகஞ்சியது கொண்ட
போதுகளங்கமறவாங்கியதுநிற்கும்பாரு கொடுத்திடப்பா மருந்
திடுதீர்ந்துபோசசுகோசமனுவிலகிற்றுதொழிலைப்பாரே. (௱௭௮)

சாதிலிங்கக்கட்டு.

பாரேநீ*லிங்கமதுவிராகன்பத்துபாங்கானமுலைப்பாலிலொ
ருநாட்போட்டு-சீரேநீவிராகனெடைதங்கரேக்குசிறப்பான லிங்
கத்தின்மேலேசுற்றிதேரேநீவெண்காரம்பொரித்துப்பூசிதிறமாக
செங்கொட்டைபடிநறுக்கிப்போட்டுவீரேநீயிடித்தப்பாதேங்கா
ய் பட்டம்விதமாகலிங்கத்தைப்பொதிந்துமூடே (௱௭௯)

* லிங்கம்-சாதிலிங்கம் *மட்டம்-அளவு

மூடியேசிறுசட்டி நடுவில்வைத்துமூர்க்கமுள்ள பசுவெண்
ணெய்த்தேங்காய்விதம்-நாடியேசெங்கொட்டைபுருண்டை மே
லே நலமாகவைத்தெரிக்கக் கனல்தான்மீறி- ஆடியேதீயெரிந்து
சாம்பலாகும் அப்பனேஆறவிட்டு எடுத்துபாரு- கூடியேலிங்கம
துவுருக்கிக்கட்டி கொற்றவனே*உருக்கதுபோலிருக்கும் பாரே,

*உருக்கு-எஃகு

சூலை யஅறுகியாழம்

பாரடாசிவன்வேம்புசங்கம்வேருபாங்காகமூக்கழஞ்சு சித்தி
ரமூலங்கூரடாவெள்ளறுகு*அசுவகெந்திகொடிதானசங்குப்பிமூ
லத்தோடுவீரடாபிரம் பினுடகிழங்குகூடவிதமானபூவரசன்பட்
டையோடுசேரடா*நஞ்சுண்டபாட்டையப்பாசிறப்பாகவகைக்கு
வகைபலந்தான்ரண்டே

*அசுவகெந்தி-அமுக்கரா
*நஞ்சுண்டப்பட்டைநஞ்சுபாலப்பட்டை

இரண்டானவாய்விளங்கமிளகுசுக்கு இரதமிலாகாட்டுச்சீர
கமுமப்பா பண்டானவகைக்குபலமாண்டதாக*பசு மூலிசரக்கை
யுஞ்சேர்த்திடித்தெடுத்து மூண்டனபாங்காக்கி யொருபங்கப்பா
மூக்கியமாய்க்கியாழம்வைத்துபரங்கிப்பட்டைப ண்டாகக்கால்ப
லந்தான்மடிந்துபோட்டுபடிசலந்தான் விட்டெரித்தெட்டொன்
ருய்வாங்கே. (௧௮௨)

*பசுமூலி-பச்சைமூலி

வாங்கியேபறங்கியுடபட்டைதன்னை வளமாகக்கியாழத்தில
ாத்துமைபோல்தூங்கியே திரியாமல்கலக்கிப்போடு துடிகொ
ண்டகட்டுலிங்கம்பணவிடையிலப்பாதாங்கியே யுரைத்துவிடுஇந்
தபாகந்தயவாகாராறுவேளைகொள்பாங்கியே சூலைபதினெட்டும்
தீரும்பாங்காகப்பத்தியந்தானென்றுகாது (௧௮௫)

ஒன்றானவெங்நீரும் அன்னங்கொள்ளு ஒகோகோமறுபத்தி யமறுநாட்காருநன்றாகஇப்படியேகார்த்தாயானால்நாயகனேநோ யேது சூலையேதுசென்றானவியாதியது அணுகுமோசொல் செம் மையாய்சடலமங்கேவலுத்துப்போகுங்கன்றானபோகருட கடா ட்சத்தாலேகருவாகபுலிப்பாணிப்பாடினேனே (௩௮௪)

செங்கரந்தி-தடிப்புக்கு.

பாடினேன்கொடிக்கள்ளி பபறுபோலேபாங்காக வொருது லாம் பாண்டத்திட்டுநாடினேன்ஒருகுடத்தில்சலத்தைவிட்டுநா யகனேயெட்டொன்றாய்க்குறுகக்காய்ச்சி கூட்டினேன்வடிகட்டுந் தரந்தானேமுகொற்றவனேபடியளாக்காலந்திசந்திநாடினேன் திரியாதேகொண்டாயானால்நலமாகச் செங்கிரந்திதடிப்புபோமே.

போமேநீமூன்றுநாளாறுவேளை பொங்கமுடன் மறுபத்திய மூன்றுநாளாம்நாமேநீளாறுநாளீராறுவேளை நாயகனேஉப்பில் லாக் கஞ்சியாகும்ஆமேநீஏழாநாள்பத்தியத்தைத்தீரு அடவாக விளக்கெண்ணெய்முழுகிவாநீதேமேநீகிரந்திவகை யெல்லாந்தீ ருந்திறமாகபோகருடகாட்சந்தானே. (௩௮௫)

தானென்ற*ஓடுக்கானைப்பிடித்துவந்து தயவாக செஞ்சீலை மேலே சுற்றி-வானென்றசாலாகையிலேகுந்திக்கொண்டுவளமா கவேப்பெண்ணெய்மேலேவாருகோனென்றதீபிடித்துவேகவேக கொற்றவனேசுடரெண்ணெய்மேலேவாருபானென்ற எண்ணை யைநீயேழுதரம் ஈந்தால்பண்பானஎண்ணெயதுதயிலமாச்சே.()

* ஓடுக்கான்-ஆமை

ஆச்சேநீதயில்மதுதுட்டெடைதான் - விதம்அப்பனேஉள் ளுக்குக்கொடுத்தபோது-வாச்சேநீமந்தாரசன்னியேதுவகையா க மூன்றுநாளாறுவேளைவீச்சேநீயாறுநாள்பத்தியமாய்க்காருவி த்தகனேஉப்பில்லாகஞ்சியாகும்பாச்சேநீமுன்தயிலங் துவளைப் போடு பண்பாகஏழாநாள் நீரைவாரே. (௩௮௭)

காதடைப்புக்குத்தயிலம்.

வாரேநீயின்னமொன்றுசொல்லக்கேளுவளமாக துலாமுள காய்நிறுத்துப்போடு-சேரேநீதாணிநீரெட்டொன்றாக்கி செப்ப முடன்மண்சட்டிதனிலிறுத்துகாரேநீஎள்ளெண்ணெய் நாழிவிட் டுக்கனிவாகமிளகுபலமரைத்துப்போடு-திரேநீமெழுகுபதந்தனி ல்வடித்துதீர்க்கமாய்முழுகிவாரப்பலனைக்கேளே. (௩௮௮)

கேளேநீநீர்ச்செரிப்பதிமிருவாதங்கெணிதமாய்ச் சோகை யொடுமெண்டைகுத்து - வீளேநீமேல்வலிகள்சூலைநோயும்விதமா னபடைசூலை மேகவாயும்பாளேநீசொரிசிரங்குந்தீரும்பாரு பண் பான காதடைப்புக்காதுக்குத்துருளேநீயிவையெல்லாந்திருந் தி ருஞ்சுகமானபோகருடகடாட்சந்தானே. (௩௮௯)

வயிற்றுக் கடுப்புக்கு.

தானென்றசுக்குமொருவிராகன்ரண்டுதயவாகமோருவிட்டு மையேபோலாட்டு-கோனென்ற அரிசிலையில் வைத்துத் தைத்துக்கு

ணமாகமோருவிட்டுவேகவைத்துமானென்றவழூதரமிந்த பாதம்
மைந்தனேதயிருவடிகட்டிநேரே - வானென்றதயிரில்வைத்துவி
ழுங்கும்போதுவயிற்றிரைச்சல்கடுப்புமுதல்தீர்ந்துபோமே ()

பேதிமாத்திரை.

போமேநீநேர்வாளஞ்சுத்திசெய்துபொங்கமுட னுமணக்கு
காசுகட்டிஆமேநீயோரிடையாய் நிறுத்துக்கொண்டுஆவின்பால்
விட்டரைத்துதுவரைப்போலே-தாமேநீ* குளிகையொன்றுவெ
ந்நீரிற்கொள் தயவாகபேதியதுயாகும்பாரு -வாமேநீபேதியதுய
திகமானல் வளமானவசம்புகட்டி கியாழங்கொள்ளே. (௱௯௨)

* குளிகை-மாத்திரை

தலைவலி-சன்னிக்குப்புகை

கொள்ளவேஇன்ன மொன்றுசொல்லக்கேளு கொடிதான
பெருங்காயமோமஞ்சுக்குதெள்ளவேசாம்பிராணி மிளகுசாரம்
தெளிவாநசித்தரத்தைக்கழல்பருப்புமெள்ளவேசீரகமும்லிங்கந்
கூடமேன்மையாய்சமன்கொண்டு*அருக்கும்பாலில்தள்ளவேதிரி
யாக்கிப்புகைதான்காட்ட தலைவலியுஞ்சன்னி முதலோடிப்போ
மே. (௱௯௩)

* அருக்கம்பால்-எருக்கம்பால்

கர்ப்பூரக்குளிகை.

போமேநீசாதிக்காய்சாதிபத்திரிபொங்கமுடன் தக்கோலம்
ஏலங்கோஷ்டம் வாமேநீசந்தனம்வால்மிளகுங்கூட வகைவகை
க்குவிராகனிடைநிறுத்துப்போடு- தாமேநீகிராம்பதுவும்விராக
ன் மூன்றுதயவானகஸ்தூரிபச்சைப்பூரம்ஆமேநீகுங்கு மப்பூவ
கைவகைக்குஅடவாகவிராகனெடையரையுமாமே (௱௯௪)

ஆமப்பாஇளநீராலரைத்துமைபோல்அடவாகக்குன்றிமணி
போலுருட்டி-தாமப்பாநிழலுலர்த்திதாம்பூலத்தில் தயவாகத்தி
ன்றுவரப்பலனைக்கேளு-வாமப்பாமுகவசியந்தே கங்காந்தி வள
மானபல்லிலுள்ள வியாதிதீரும்வேமப்பாஅக்கினியாமந்தந் தீரு
ம்விதமானசன்னிமுதல்மேகம்போமே. (௱௯௫)

போமப்பாகொடிவேலிநிலைப்பனையின்மூலம்பொங்கமுடன்
றண்ணீர்மிட்டான்கிழங்குகூட-நாமேநீசீனிசர்க்கரையுங் கூடநா
யகனேவகைக்குவகைப்பலந்தான்கேளு- தாமேநீபலந்தானேமு
ப்பதாகுந் தயவான செங்கொட்டைநாற்பதாகும்-தாமேநீதூளி
டித்துசூரணமேசெய்துவளமாகசர்க்கரையும்நேரேகூட்டே. ()

கூட்டேநீயிதிற்பாதிதேனுஞ்சேர்த்து குணமாகஇதிநேரே
ஆவின்னெய்யை-நாட்டப்பாநாற்பதுநாளந்திசந்திநாயகனேபத்
தியநதான்பாலுஞ்சோறும்வாட்டப்பாசர்க்கரையுஞ்சீனியாகும்
வளமானவிராகனெடையைந்தேகொள்ளுஆட்டப்பா இதனுடை
யபலனைக்கேளு அப்பனேபதினெட்டுசூலைபோமே. (௱௯௭)

போமடாகுஷ்டம்பதினெட்டுந்தீரும் வொலிவானவலிப்பைந்
தும் முதிரமெட்டுந்தாமடாஅஷ்டகுன்மம்பாண்டு ஆறும்தயவான
விஷக்கடியுமேகந்தீரும்-ஆமடாபலமூண்டுநரையுமாறும்அடவா

ன்தேகமது அழகோசாந்திநாமடாபோகருடகடாட் சத்தாலேந
லமாகப்புலிப்பாணிப்பாடினேனே. (௱௯அ)

பல்லுக்குப்பொடி.

பாடியேஅரக்குடனேசீனகாரம் பண்பானதுருசுடனேகடுக்
காயப்பா நாடியேமாசக்காய்வகைவகைக்குநலமானவிராக னெ
டைநிறுத்துக்கொண்டு ஆடியேகடுக்காயுந்தான்றிக்காயும்அரைப்
பொடியுங்வகைக்குவகைவிராகன்மூன்றுகூடியேயெலு மிச்சம்ப
ழச்சார்விட்டுக்குணமாகஉலரவைத்துப்பொடியாய்செய்யே. (
பொடியெடுத்துவிளக்கிவரப்பலனைக்கேளு புழுச்சாகு*மெ
யிற்கரையுந்திரும்பாரு-இடியெடுத்தப்பல்லசைவும் பல்லுக்குத்
துஎரிவானவாய்ப்புண்ணுநாற்றந்திரும்வடிவானப்பல் லொளிவு
வசியமுண்டுவளமான பல்லிலுள்ளவியாதிதீருங்- துடியானபோ
கருடகடாட்சத்தாலேதுவக்கமாய்ப்புலிப்பாணிப்பாடினேனே.(

* எயிறுங்கரை-பல்லீறு

வாய்வுவிக்கல்சோகைக்குமருந்து

பாடியேதிப்பிலிசுக்கு மூளகுங்கூடப்பண்பாக ரோசினையும்
பரிந்துகேளு-நாடியேவகைவகைக்குப்பலந்தா னென்று நாயக
னேகடுக்காய்த்தோல்பலந்தானுலு-கூடியேதூளிடித்துச் சூரண
மேசெய்து குணமாகபனவெல்லம்பலந்தானுலு-ஆடியேகோலத்
திலப்பாகாய்ச்சி அப்பனேநெய்தேனில் கிண்டிப்போடே(உ௱க)
போடேநீகழற்சிக்காயளவுகொள்ளபொருமலுடன்வயிற்று
வலிவிக்கல்சோகைஆடேநீமலக்கட்டுக்கிருமிதோஷம்அடவான
தேகசலஞ்சூலைவாயு-நாடேநீநீர்ச்செருப்பு மேல்வலியும்போகு
ம் நாயகனேவாயுவென்றரோகம்போகுங்கூடேநீபோகருடகடா
ட்சத்தாலேகுணமாகப் புலிப்பாணிபாடினேனே (உ௱உ)

கடுகெண்ணெய்.

பாடினேன் கடுகெண்ணெய்ப்படிதானென்று பண்பானபெ
ருங்காயம்வசம்புசுக்குநாடியேகருநாவி சாம்பிராணி நாயகனே
வெள்ளுள்ளியோமம்*குப்பை-ஆடினேன்மாவிலிங்கப் பட்டைக்
கூட அடவாகவகைக்குவகைவிராகன்மூன்று கூடினேன்மேனிச்
சார்விட்டரைத்துக்குணமாகக் கடுகுபதந்தனில்வடித்தே. ()

* குப்பை-சதகுப்பை

வடித்த எண்ணெய்த்துவலேபிட சன்னிபோகும் வளமாகவ
லிப்புடனேசயித்தியந்திருந்-தடித்தவுடன்கால்குடைச்சல் மேல்
வலியுந்தீருந்தயவானகாதிரைச்சல்மண்டைகுத்து கொடிதான
வெண்ணெயடா வீரம்வீரங்கொற்றவனேஎண்ணெயுட அருமை
மெத்தகெடியானபோசருடகடாட்சத்தாலேகெணிதமாய் புலிப்
பாணிபாடினேனே. (உ௱௩)

பஞ்சீகரணச்-செந்தூரம்.

பாடியேதங்கமதுஒன்றரையுமாரும்பண்பானகாரிய மொன்
றேகாலாம்ஆடியேசெம்பதுவுமொன்றேயாகும் அப்பனேஇரும்

பதுவுமுக்காலாகும்கூடியேநரகமது அரையுமாகுங்குண மானர
சமதுதான்விராகனைந்துநாடியேகந்தான் விராகனைந்துநாயகனே
அறிதாரம்விராகனென்றே. (௨௱௫)

ஒன்றான இவையெல்லாம்*பொன்றலையின்சாற்றால் ஒளிவா
கஇருசரம்மைபோலாட்டிப்பன்றாகப்பொடிசெய்துகுப்பிக்கேற்
றிப்பண்பான*மாக்கல்லுக்கொண்டுமூடி வன்றாகக்குப்பிக்குச் சீ
லையேருவள மாகத்தான்செய்து வாயைவிட்டு நன்றாகச்சட்டியி
லேமணல்தானப்பாநலமாகவிரல்நாலுவுயரம்போடே. (௨௱௯)

* பொற்றலை-பொற்றவக்கையாந்தகரை

* மாக்கல்பலப்பகல்

போடேநீகுப்பிவாய்த்தெரியமூடி பொங்கமுடன் தானெரி
ப்பாய்க்கமலம்போலே-ஆடேநீநாற்சாம மெரித்தபோது அப்ப
னேசிந்தூரமாகும்பாருகூடேநீ ஆவின்பால்வெண்ணெய்தன்னில்
குணமாகப்பணவெடையில்பாதிகொள்ளநாடேநீ நாற்பதுநாள்
கொண்டபோதுநாயகனேவியாதியெல்லாந்தீருந்தானே.(௨௱௭)

தானென்றதேகமது வலுத்துப்போச்சுதயவானவசிகரமுங்
காந்தியுண்டாங்-கோனென்ற*ரசிதமதுயேழுங்கூட்டிக் குணமா
னசெம்பதிலேமூன்றுஞ்சேர்த்துவானென்றதங்கமதுஒன்றுகூட்
டி வளமாகத்தானுருக்கிகுருவென்றியதேனென்ற கரிபபோலே
யிருக்கும்பாருசெம்மையாய்யோட்டில்வைத்தூதிப்போடே. ()

* இரசிதம்-வெள்ளி

போடேநீமாற்றைந்துயிருக்கும்பாருபொங்கமுடனெடைக்
கெடைதான்றங்கஞ்சேர்த்து ஆடேநீசீவனத்தைச்செய்துகொண்
டுஅடவானசாஸ்திரத்தையறிந்துப் பாருகூடேநீ பஞ்சிகரணச்
செந்தூரந்தான்குணமாகுந்தேகமது இருக்கும் பாருதேடே நீ
யோகருடகடாட்சத்தாலேதெளிவானப் புலிப்பாணி பாடினே
னே. (௨௱௯)

சோகை-காமாலைக்கு- லேகியம்

பாடியேசுக்குடனேமிளகுகூடப் பண்பானதிப் பிலிசீரகமு
மோமம்ஆடியேகாட்டுச்சீரகமுமிஞ்சி அப்பனே சாதிக்காய்கிரா
ம்புசோம்புநாடியேகடுக்காய்ரோகணியுமேலம் நலமானகழல் ப
ருப்பு அரத்தைசிறுதேக்கு-கூடியேவலைக்குவகைவிராகன்மூன்
றுகொற்றவனேதூளிடித்துச் சூரணமேசெய்யே. (௨௱௰)

செய்யப்பாவெள்ளாட்டுப்புழுக்கைதூளுஞ் செயமாகவடிக
ட்டிசரக்கின்நேரே-வையப்பாகரிப்பான்சார்படிதானென்றுவள
மாகப்பனையுடையகருப்புக்கட்டிநையப்பா ஏழுபலம்நிறுத்துக்
கொண்டு நலமாகத்தேன்படியுமரைதான்வாருகையப்பா ஆவின்
னெய்ப்படிதான்பாதிகனிவாசுலேகியமாய்க்கிண்டிப்போடே. ()

போடேநீநெல்லிக்கா யளவிகொள்ள பொல்லாத நீர்கோ
வை பாண்டுசோகை-ஆடேநீகாமாலைசோகைவாயு அப்பனேநெ
ஞ்செரிவுநீரச்செருப்புகூடேநீ அக்கினியாமந்தந்தீருங் குணமா

னமந்தமுதல்குன்மந்தீரும்-நாடேநீபோகருடகடாட்சத்தாலேந
லமாகப்புலிப்பாணிபாடினேனே (௨௱௨)

பஞ்சீகாணமாத்திரை

பாடினேன்* தாரமொன்றரையுமாகும்பன்பானசை வீரமொ
ன்றேகாலாம்-நாடியே கெளரியது ஒன்றேயாகும்நலமானவெள்
ளையதுமுக்கால்சேருஆடியேலிங்கமது அரையும்பாரு அப்பனே
பொடிசெய்து வுருக்கிவாரு-கூடியே திரிகடுகுபொடியுந்தேனும்
கொடுப்பாயேபணவெடைதான்நோய்கட்போமே (௨௱௩)

*தாரம்-அரிதாரம்

போமேதான்வாயுவொடுகுன்ம ரோகம்பொல்லாதநெஞ்ச
டைப்புபிரமைமூர்ச்சை- தாமேநீசயரோகம் வாந்தியேப்பம்தய
வில்லாசுரங்க ளொடுதொண்டைக் கம்மல்ஆமேநீவிஷபாகங்கா
மாலைசோகை அப்பனேச ன்னியொடுவலிப்புந்தீரும்நாமேதான்
போசருடகடாட்சத்தாலேநலமாகபுலிப்பாணிபாடினேனே

பஞ்சமுகச்செந்தூரம்

பாடினேன்சாதிலிங்கம் ரசமுங்கெந்த பண்பானவீரமுடன்
தாரங்கூட்டி ஆடினேனிவையெல்லாஞ்சமனாய்கொண்டு அடவாக
க்காட்டாமணக்கன்பாலாலாட்டிநாடியேவில்லைத்தட்டிபுலரவை
த்துநலமானப்புடமதுதான்கோழியாகுங் கூடியேயாறவிட்டுஎடு
த்துப்பாருகொற்றவனேசெந்தூரமாகுந்தானே (௨௱௫

தானென்றசெந்தூரம் பணவெடைதான்கொள்ளதயவான*
திரிகடுகுபொடியிலப்பாவேனென்றதேனுடும் வெண்ணெயாகும்
பண்பான பனையுடையகருப்புக்கட்டி- வேனென்ற விதுகளிலே
கொள்ளும்போதுவெடிசூலை குஷ்டமுதல்கறுப்புவெள்ளைக்கோ
னென்றமேகத்தாலெடுத்திரோகங்கொற்றவனே குன்மமுதல்வா
யுபோமே. (௨௱௬)

*திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி

இரசசெந்தூரம்

போமேதான்ரசம்பத்துகெந்திபத்து பொங்கமுடனரிதாரம்
ஒன்றுங்கூட்டி-ஆமேதான்அம்மியிலேபொடியாய்ப்பண்ணிஅப்ப
னேவறுத்தெறிநீகைபாகமாகதானேதான்* அண்டைத்தைப்பொ
டித்துக்கொட்டிதயவாகஅதிற்பாதிபோட்டுமூடிவாமேதான்மண
ில்வைத்துக்குடத்தைப்போடுவளமானசிந்தூரமாகும்பாரோ ()

*அண்டம்கோழிமுட்டை*குக்குடம்-கோழியளவுபுடம்

பாரோதான் பணவெடை தான்பனவெல்லத்தில் பாங்காகக்
கொண்டவுடன்பறங் கிச்சோலைசேரோதான்கிரந்தி யொடுகுட்ட
ரோகம்செயலானதாதுநஷ்ட மலிங்கப்புற்று-தீரோதான்யாரையா
ப்புவிற்புருதியோடுதிறமாகதேகமதுகாந்தியுண்டாம் வீரோதான்
போகருடகடாட்சத்தாலே விளம்புகிறேன்புலிப்பாணிவிளங்கத்
தானே (௨௱௮)

நீரொரிவுக்கு

தானென்றநீரொரிவுகண்டு தானல்தயவாகக்கட்டுக்கொடியி
லையரைத்துவானென்றநிம்மக்காய ளவுதானும்வகையாகக்கால்ப

டியாஞ்சலத்திற் சேர்த்து- கோனென்ற பிரகமும் ஏலந்தானும்
கொடிதாகவிராகனெடைபொடித்துப்போட்டு ஆனென்றசீனிச
க்கரைதான் துட்டுஅளவாகக்கலந்துகொண்டுஉண்டுபாரே (௨௧௯)

புரையாதிரணங்களுக்குத் தயிலம்

பாரோதான் நொச்சிவேர் அழிஞ்சிவேரும் பண்பானவிழுதி
வேர்சமனாய்ப்போட்டுசிரோதான் குழித்தயிலமாகவாங்கிசிறப்பா
கப்புரைகளுக்குத்விட்டபோது- கூரோதான்விற்புருதி கண்டமாலை
குழிப்பானஅரையாப்புக்கன்னபுற்றுநேரோதான் தொடைவாழை
யோடுசோரனப்பிளவையொடுதீரும்பாரே (௨௨௰)

பறங்கிப்பட்டைதங்கம்

பாரோதான்பறங்கியுடப்பட்டையப்பாபாங்காகபலமைந்துநிறு
த்துக்கொண்டுசேரோதான் பொடிப்பொடியாய்க்கண்டமாக்கிசிற
ப்பாகவேசரியின்லத்திசாற்றில்- வீரோதான்பிசரியதை யுலர்த்தி
வைத்துவிதமாகமேனிச்சார்பொடுதலைச்சார்- கூரோதான்வகயா
னசார்குப்பிச்சாறுங்குணமானபசுவின்பாலின்னங்கேளே (௨௨௧)

*சேவரி-கழுதை

கேளேநீவெவ்வேறேயு லர்த்திக் கொண்டு கெணிதமுடன்
கெந்தகமும் பலந்தானென்று வாளேநீரசமைந்து லிங்கமைந்து
வகையாகபொடிபண்ணி மூன்றும்போடு-வீளேநீமறுசட்டிதமர்
கள்போட்டுவிதமாகச்சட்டிவாய்தன்னில்மூட்டி-சூளேநீபட்டை
யைத்தான்மேலேவைத்துசுகமாகமறுசட்டிகொண்டுமூடே ()

மூடியேமண் சீலைவலுக்கச்செய்து மூசியாமல்தானெரிப்பா
ய்சாமமொன் றுஆடியேயாறவிட்டெடுத்துலர்த்தி அப்பனேசூர
ணமாய்ச்செய்துக்கொண்டு-நாடியேகழஞ்சியொன்றுகொண்டா
யானால்நலமாகமேகவகைபிருபத்தொன்றும்-ஓடியேபோகுமடா
சூலையெல்லாம்உத்தமனேகருங்கிரந்திதீருந்தானே (௨௨௩)

திருமேகைக்கரும்புவெள்ளைத்தானும்திரமானபிடிப்புவகை
ரணங்கள்யாவும்-ஆருமேரணங்கள் வகைசிரங்குகுஷ்டம் அப்ப
னேசெந்தாழைத்தடிப்புந்தீரும் கூருமேவாய்நாற்றம்தந்தச்சூலை
குணமாகமண்டலந்தான் தின்றால்தீரும்-பாருமேபத்தியந்தானித
ற்கோஇல்லைபண்பாகபோகருடகடாட்சந்தானே (௨௨௪)

வல்லாதிதயிலம்

தானானவல்லாதி தயிலமொன்றுதயவாகசெங்கொட்டைஅ
ழிஞ்சிக்கொட்டை-மானானபூவந்திக்கொட்டையோடுமைந்தனே
யெட்டியுடக்கொட்டைதானும் வானாளவேம்பின்புண்ணாக்குங்கூ
டவகையானசிவன்வேம்பு இவையெல்லாஞ்சரியெடையாய்த்தா
க்கிகனிவான*கன்னிபுடச்சாற்றில்போடே (௨௨௫)

* பூவந்தி-மணிபுங்கு

* கன்னி-கற்றாழை

போடேநீயொருநாள்தானூறவைத்துப்பொங்கமுடனிருகா

ள்தானெடுத்துலர்த்தி-ஆட்டேநீ துழித்தயிலமாகவாங்கி அப்பனே காசிடை தான்கொண்டாயானால் நாட்டேநீ பனவெல்லந்தன்னிற் கொள்ளுநாயனேசூலைபதினெட்டுந்தீரும்- வாட்டேநீபோகாமல்ம ண்டலங்கால்கொள்ளமைந்தனேபத்தியந்தானென்றுகாதே ()

இடிவல்லாதி

ஒன்றானவல்லாதி சொல்லக்கேளு உத்தமனேசெங் கொட் டைப்பலந்தான்பத்து-நன்றாகமூக்குவெட்டிச்சாணிப்பாலில்நல மாகமூன்றுநாளூறவைத்து- அன்றானக்கல்லுறலிற்றானேபோட் டு அப்பனேயெள்ளதனையிடித்துப்போட்டு-கன்றானகொப்பரைத் தேங்காயிரண்டு,கனிவாகத்தானிடித்துக்கலிவாய்ப்போட்டே ()

போட்டேநீபறங்கியுடப்பட்டையப்பா பொங்குடன்மூக்கரா சித்ரமூலம்கூட்டேநீ கஸ்தூரிமஞ்சளோடு குணமான கருஞ்சீரம் சிவலுழுவையோடுதேட்டேநீகுருசானிவோமத்தோடுதெளிவான வாற்றிலையின்காம்புதானும்நாட்டே நீகடுக் காயுந்திப்பிலிதானும்ந லமானகோஷ்டம்வகைவகைக்குக்கேளே (௨௨௮)

கேளேதான் வகைவகைக்கோர்பலமாய்த்தூக் கிகெணிதமு டன்சூரணமாய்ச்செய் துக்கொண்டு- வாளேதான்கல்லுரலில்மய னம்போலவகையாக இடித்ததனைசொல்லக்கேளுஆனேதான்ர சகற்பூரமப்பாஅடவாகவிராகனைந்துபொடித்துப்போட்டுசாட்டே தான்பனவெல்லம்பலந்தானைந்துசார்வாகப்போட்டிடிப்பாய்தய வாய்த்தானே (௨௨௯)

தானென்றவல்லாதி அந்திசந்திதயவாகவொருமண்டலமே கொல்லவானென்றகுஷ்ட மொடுகிரந்திசூலைவகையாகஅரையா ப்புமேகமெல்லாம்-கோனென்றகுன்மமெட்டுஞ்சுக்கிலவாய்வுகு ணமில்லாரணசங்கிரந்திதீரும்-ஏனென்றபத்தி யந்தானிச்சாபத் தியம்இதமானவுப்புமுதல்வறுத்துக்கூட்டே (௨௩௰)

கூட்டப்பாதயிர்மோரு நெய்புமாகுங்குணமானதுவரையுட பருப்புமாகும்-நாட்டப்பாபாசி யென்றபயறுமாகும்நலமானநல் லாரைப்பொன்னாங்காணி ஆட்டப்பாமச்சமென்றபதார்த்தந்தள் ளுஅடவாகமற்றெல்லாமாகும்பாரு ஆட்டப்பாவிளக்கெண்ணெ ய்தேய்த்துமூழ்குஅடவாகசுந்திரம்போல்தேகந்தானே (௨௩௧)

நோயின்நட்சத்திரங்கள்கறிவு

தானென்றஅசுபதிநாள் முதற்காலப்பாதயவாகவொன்பது நாள்சுரமேதீரும்தேனென்ற ரண்டாங்கால்கொல்லுமப்பாதிறமா னபத்தாநாள்மரணமாவான்- கோனென்றமூன்றுங்கால் பதினைந் தாகும்குணமாகநாலாங்கா ல்மரணஞ்செய்யும்வானென்றபரணி தனின்முதற்கால்மூன்றுவளமானரண்டாங்கால்வேழாமென்னே

என்னவேமூன்றுங்கால் பதினைந்தாகும் எளிதில்லாநாலாங் கால்பதினைந்தாகும்-நன்னவே கார்த்திகைக்குமுதற்காலானல்ந லமானவொன்பதாநாள் தீரும்பாரு பன்னவே ரண்டாங்கால்பத

மேயாகும்பண்பானமூன்றுங்கால்பதினைந்தாகும்- அன்னவேநா
லாங்கால்நாற்பத்தெட்டுஅடவாகரோகணியில்முதற்கால்பத்தே

பத்தானரண்டாங்கால்பதினெட்டாகும் பண்பானமூன்றுங்
கால் எண்ணான்கப்பா-பெத்தானநாலாங்கால்எண்பத்திரண்டுபே
தமில்லைதீர்ந்துவிடுமின்னங்கேளு-முத்தான*மான்றலையின்முதற்
காலப்பாமுப்பதுநாளானபின்புதிரும்பாரு-சித்தானரண்டாங்கா
லிருபத்தெட்டு திறமானமூன்றுங்கால் பதினைந்தாமே. (உ௱சு)

* மான்றலை-மிருகசிரிடம்.

ஆமேதான்நாலாங்கால்முப்பத்தைந்துஅடவானஆதிரைநா
ள்முதற்கா*லொன்பான்-தாமேதான் ரண்டாங்கால்மரணமாகும
தயவாகமூன்றுங்கால்நாள்தான்பத்துவாமேதான்நாலாங்காலிரு
பத்தைந்துவளமான புனற்பூசம்நாள்தானேழுபோமேதானிரண்
டாங்கால்நாள்தான்பத்து பொங்கமுடன்மூன்றுங்கால் பதினெ
ட்டாமே (உ௱ரு)

* ஒன்பான்-ஒன்பது

ஆமப்பாநாலாங்கால் மரணஞ்செய்யும்அடவானபூசமப்பா
முதற்காலேழு - சேமப்பாரண்டாங்கால் பனிரண்டாகும் சுக
மான மூன்றுங்கா லெண்பதாகும் காமப்பா நாலாங்காலிருபத்
தேழுதனிவானவாயலியமுதற்காலொன்பான்- தாமப்பாரண்டா
ங்காலிருபதாகுந்தயவானமூன்றுங்கால்தொண்ணூறுதானே ()

தானானநாலாங்கால்முப்ப தொன்பான்தயவானமகமுதற்கா
ல்மரணஞ்செய்யும்-வானானரண்டாங்கால் முப்பதாகும்வளமான
மூன்றுங்கால் எண்பத்தைந்து-கூனானநாலாங்கால்நாள்தானைந்து
குணம்பூரமுதற்கால்தான்சாவுமாகுந் தேனானரண்டாங்காலிருப
த்தைந்தில்சிறப்பானமூன்றுங்காலிருபத்தாறே (உ௱எ)

*முப்பத்தொன்பான்-முப்பத்தொன்பது

ஆறானநாலாங்கா லெண்பத்தொன்றும் - அடவானவுத்திரந்
தான்முதற்காலெட்டுவீறானரண்டாங்கால்முப்பதாகும் விதமாக
மூன்றுங்காலன்பத்திரண்டாந்தீரானநாலாங்கால்மரணமாகும் தி
றமானஅஸ்த முதற்கால்தானெட்டு கூரானரண்டாங்கால்பதினை
ந்தாகுங்குணமானமூன்றுங்காலிருபத்தெட்டே (உ௱அ)

எட்டானநாலாங் காலெலன்பத்திரண்டு எளிதானசித்திரையு
முதற்காலொன்பான்நெட்டான ரண்டாங்கால்பதினைந்தாகும்நே
ரானமூன்றுங்கால் பன்னிரண்டு- கிட்டான நாலாங்கால்நாற்பத்
தொன்றுகெதியானசோதி முதற்காலீராறு குட்டானரண்டாங்டா
கால்மரணஞ்செய்புங்குணமானமூன்றுங்காலெலன்பத்தெட்டே()

எட்டானநாலாங்காற்பன்னிரண்டுஎழிலான விசாகமுதற்கால்தானென்பான் - தட்டானரண்டாங்கால்நாள்தான்மூன்றே தயவானமூன்றுங்கால்நாற்பதாகும்- பட்டானநாலாங்கால் எண்பத்தொன்றுபாங்கானஅநுஷமுதற்கால்தான்சாவு-சிட்டானரண்டாங்காலிருபதப்பாசெயலானமூன்றுங்கால் தொண்ணூறென்னே.

என்னவேநாலாங்கால் நாற்பதாகும் எழிலானகோட்டைமுதற்கால்தான்சாவு-நன்னவேரண்டாங்காலிருபதப்பா நாயகனே மூன்றுங்கால்முப்பத்தொன்று- வன்னவேநாலாங்காலெண்பத்திரண்டு, வளமானமூலமுதற்கால்தான்சாவு - அன்னவேரண்டாங்காலெண்பதாகும், அடவானமூன்றுங்கால் நாள்தான்பத்தே.

பத்தானநாலாங்கால்பதினெட்டாகும்-பண்பானபூராடமுற்காலொன்பான்-சித்தானரண்டாங்கால்மரணஞ்செய்யுஞ்செயலானமூன்றுங்கால்நாள்தான்பத்து- வித்தானநாலாங்காலன்பத்தினுவிதமானஉத்திராடமுதற்காலேழு நித்தானரண்டாங்காலிருபதாகும்நேரான மூன்றுங்காலன்பதாச்சே (௨௪௨)

ஆச்சப்பாநாலாங்கால்நாற்பதாகும்அடவான* ஓணமுதற்பதினென்றப்பா-பேச்சப்பாரண்டாங்கால் பத்துநாளாம்பேதமில்லைமூன்றுங்கால்நாள்தானெட்டு-வீச்சப்பாநாலாங்கால் மரணஞ்செய்யும் விதமான அவிட்டமுதல்கால்தானென்பான்-நீச்சப்பாரண்டாங்கால் பதினைந்தாகும் நிசமானமூன்றுங்கால் முப்பத்திரண்டே, (௨௪௩)

ஓணம்-திருவோணம்

இரண்டானநாலாங்கால்முப்பத்தொன்பான்- நிசமானசதயமுதற்கால்தானேழு - வண்டானரண்டாங்கால்பத்தாம்பாருவளமானமூன்றுங்கால் நாள்தானாலு- திண்டானநாலாங்கால்நாள்தானைந்துதிறமானபூரட்டாதி முதற்கால்சாவு-கொண்டானரண்டாங்கால்பதினாறுகுங்குணமானமூன்றுங்காலெண்பத்தொன்றே. ()

ஒன்றானநாலாங்கால்நாற்பத்தொன்றுஒளிவுவுத்திரட்டாதிமுதற்காலேழுநன்றானரெண்டாம்பதினெட்டாகும் நலமானமூன்றுங்காலேழாம்பாரு - குன்றானநாலாங்காலிருபத்தெட்டுக்குணமானரேவதியுமுதற்கால்சாவு அண்டானரண்டாங்கால் பதினென்றப்பா-அடவான மூன்றுங்கால் பதினெட்டாமே (௨௪௫)

மரணநாளறிய

ஆமேநீநாலாங்காலிருபத்தாறுஅடவானமரணமென்னநாள்தான்சொல்வேன்-வாமேநீ*அருக்கநாள்பரணியாகா வளமானதிங்கட்சித்திரையுமாகாதாமே நீசெவ்வாய்க்கு உத்திராடந்தயவா

ணபுதனுக்கு அஸ்தமாகா-நாமேநீ*குருநாள்தான் கேட்டையாகா நலமான*புகர்நாள்பூராடத்திதே (௨௪௬)

*அருக்கநாள்-நாயிறு

* குருநாள்-வியாழம்

*புகர்நாள்-வெள்ளி

தீதானசனிநாள்ரேவதியுமாகாதிங்குவருமின்னுளில்நோய்கள்கண்டால்வாதானநமக்குஅறுதியாகும்வந்தநோய்தீராது கொல்லுங்கொல்லுங் - தானுனவைத்தியரேநூலைப்பார்த்து தயவாக வைத்தியங்கள்செய்யவேணும்-கோனுன போகருடகடாட்சத்தாலேகொற்றவனேபுலிப்பாணி சொன்னேன்பாரே (௨௪௭)

சகலமேகங்களுக்கு ரசகெந்திமெழுகு

பாரேநீரசகெந்திரசகர்ப்பூரம்பண்பான அரிதாரமூசிகாந்தம்சீரோநீதுருசுதுத்தமிருதார்சிங்கிசிறப்பானசுக்குடனே ஓமமஞ்சள்வாரோநீதிப்பிலியுமரத்தைக்கோஷ்டம் வளமானவாலுழுவைசோம்புஏலலங்கூரோநீசாதிக்காய்மிளகு*சீரங் குணமானகார்போகமாசிக்காயே (௨௪௮)

* சிரம்-சீரகம்

காயானதேரவரம்வாய்விளங்கங்களிவசம்பு லவங்கமுடன்பரங்கிப்பட்டைதாயானசேங்கொட்டை கடுக்காய்த்தோலும்தயவானகருஞ்சீரங்காட்டுச்சீரம்-பாயானசிறுதேக்குத்தாளிசபத்திரிபண்பாகமுக்திரிகை * பிரம்மிமூலம் - வாயானஎட்டிவிதைதேற்றுன்வித்துவளமானநீர்ப்பூண்டு எள்ளுமாமே. (௨௪௯)

* பிரம்மின்மூலம் - பிரம்பங்கிழங்கு.

ஆமேநற்கொள்ளுடனே தேங்காக்கூட அடவானசின்னிவேர்சங்கம்வேரும் - தாமேநீஅமுக்கராகொல்லன்கோவைதயவானகொடிவேலி மூலத்தோடு-வாமே நீவகைவகைக்கு விராகனென்றுவளமானகோழிமுட்டை ரண்டுவாரு-போமேநீயிவையெல்லாம்பொடியாய்ச்செய்து பொங்கமுடன் கல்லுரலில் போட்டிக்குத்தே. (௨௫௰)

குத்தப்பா இதுநேரேபனவெல்லந்தான் குணமாகநால்சாமமிடித்துத்திரு பெத்தப்பாவழித்தெடுத்துசிமிழில்வைத்துபேதமில்லை சுண்டக்காய் விதங்கொள்ள - முத்தப்பாமோருஞ்சோறுண்டுமுன்னே மூசியாமல்மருந்துண்ணுமண்டலந்தான்-சித்தப்பாமுழுதுநாள் மருந்துண்ணுதே சிரப்பாகபத்தியந்தானில்லைதானே.

தானென்றவெடிசூலேமேகசூலைதயவான இடிசூலைபுடைக்குஞ்சூலை - வானென்றதுடிவாதசூலைவளமானகால்குடைச்சல் கா

ணைதீரும்-மானென்ற ஆம்புலிப்புருதிமாலைமதியாதகுஷ்டமொடு
விஷநீர்தீரும்கோனென்றகுரைநோயுஞ்சிரங்குந்தீருங்குணமான
புழுவெட்டித்தடிப்புபோமே. (௨௫௨)

* குரைநோய்கால்விரல்கள்கைவிரல்கள்குறைகிற
பதினெட்டுக்குட்டத்தொன்று

போமேநீயோனிதனில்லிங்கந்தன்னில்பொலிவானஆமைய
டிசிலந்திமேகம்தாமேநீசெங்கிரந்திகருங்கிரந்திதயவான அரிகிர
ந்திபொரிகிரந்திவாமேநீபருகிரந்தியிடிகிரந்திவளமான இடிவிழு
ந்துபுரைமேற்புண்ணு ஆமேநீ அரைகடியுந்தண்டிற்புண்ணு அட
வானக்குள்ளிமாதேவியாமே. (௨௫௩)

ஆமேநீதுடைவாழைமுட்டுவாழைஅடவானகுழிவாழைமூது
குவாழைசேமேநீபுழுகுவாழைபுலாவில்வாழைசெயலான*தமர்
க்காய்ச்சிலந்தியோடுஓமேநீகுழிப்பிற்றுயோனிப்புற்றுஒளிவான
இடிபுற்றுகன்னபுற்று தாமேநீபலச்சிலந்திக் கன்னத்தோசை ச
தைவளருங்கண்ணோசைபோகும்பாரே. (௨௫௪)

* தமர்க்காயாச்சிலந்தி-துளையாறுச்சிலந்தி

பாரடாபிளவையொடுபிளவைப்பூச்சிபண்பான ராசனென்
றபிளவையோடுகூரடாநேத்திரமேல்பிளவையோடுகொடிதுதடி
ச்சிலந்திபுடைச்சிலந்தியோடுதேரடாபவுத்திரங்கள் மூளைமூலங்
கள்நெடியபதமெட்டுச்சக்கரத்திறேடு-வீரடா இவைகளெல்லா
ந்தீரும்தீரும்விதமாகப்போகருடகடாட்சந்தானே. (௨௫௫)

பில்லிக்குத் துவளை

தானேதானின்னமொன்றுசொல்லக்கேளுதனிக்கட்டுச் சிர
கத்தினிலையைவாங்கி-வானேதான்கசக்கியதைதடவும்போது வ
ளமானவெடிபில்லியெரிவுவீக்கம் - கோனேதான்மேலெரிப்புவூ
றும்பில்லிகுணமாகும் பார்வைமுதல் திட்டிதீரும் - ஆமேதான்
போகருடகடாட்சத்தாலே அடவாகப் பாடுகிறேன் புலிப்பாணி
யாமே. (௨௫௬)

குமட்டிக்காய் பதங்கம்,

ஆமேகேள்குமட்டிக்காய்பதங்கஞ்சொல்வேன்அப்பனே த
ழுதழையுமாவின்பட்டை-தாமேநீகொடிவேலியமுக்கராவேர் த
யவாகப்பாவட்டைமுடக்கற்றுனும்வாமேநீவெள்ளச்சாரணையுங்
கூடவளமானசத்திச்சாரணையுமப்பாநாமேநீவகையுடனே நல்ல
வேளைநலமானதாறுவளைகடைச்சியாமே (௨௫௭)

ஆமப்பாகுப்பையென்றமேனிகூடஅடவாகசிவன்வேம்பு அ
விரிக்கூட்டி-தாமப்பாவில்வவேர்மாவிலிங்கந் தயவாகப்பிரம்பிணு

டகிழங்கினோடு - வாமப்பாவகைவகைக்குப்பலந்தான்வேறுவளமாகத்தூக்கிச்சூரணமேசெய்துகோமப்பாசரக்குவகை சொல்லக்கேளுகுணமாகப்போகருடகடாட்சந்தானே. (உருஅ)

தானென்றசுக்குடனேகிராம்புவோமம்தயவாகதேசவரஞ்சிறுநாகப்பூ-வாவென்றமிளகுதாளிசையாம்பத்திரிமைந்தனே திப்பிலிவாள்மிளகுகூட்டு-கானென்றதிப்பிலியின்மூலமப்பா- கருவானசதகுப்பைபரங்கிபட்டை-கோனென்றஅரத்தையதிவிடயங்கூடகுணமானகருஞ்சீரகந்தான்கூட்டே. (உருகூ)

கூட்டப்பாவகைவகைக்குவிராகனைந்து குணமாகச் சூரணமாய்ச்செய்துக்கொண்டு-நாட்டப்பா இருதூளுங்கல்வத்திட்டு நலமானதிருகுகள்ளிப்பால்தான்கேளு-மாட்டப்பா விராகனிடையைந்துவாருமைந்தனே வேலியென்றபரித்திச்சாறு ஆட்டப்பா கொள்ளமட்டும்விட்டுஆட்டிஅப்பனேமைபோலே யரைத்துலர்த்தே. (உகூய)

உலர்ந்தபின்பு குமட்டிக்காய்கொண்டுவந்து உத்தமனேவிளைசதையும்போக்கிப்போடு - அலர்ந்தபின்புஅதிற்செலுத்திவாயைமூடிஅப்பனேபாண்டத்திலுள்ளேவைத்து- மலர்ந்தபின்மண்சட்டியில் மண்சீலைசெய்து மைந்தனேகுழிவெட்டிப்புதைத்துக்கேளுகலர்ந்தபின்புவெள்ளாட்டு எருவைக்கொட்டி கனமாகபாண்டத்தைப்புதைத்துப்போடே (உகூக)

போடப்பாலகுபுடமதாகப்போடு பொங்கமுடன் கருகாமலெடுத்துக்கொண்டுநாடப்பாதூளையெல்லாம் வொன்றிற்கொட்டிநலமாகநிழலுலர்த்திவைத்துக்கொண்டு கூடப்பாசாதிக்காய்விராகன்பத்துகுணமாருகுங்குமப்பூவிராகன்பத்து- ஆடப்பாபொடியைச்சூரணமாய்ச்செய்துஅப்பனேவெருகடியாய்கொண்டிடாயே. (உகூஉ)

கொண்டபின்புஎருமைமோர்சோறுமுண்ணு கொற்றவனே உப்பதுதான்வறுத்துக்கூட்டு-கண்டபின்புமற்றதொன்றுமாகாதப்பாகருவானமூன்றுநாளாறுவேளை - உண்டபின்புவயிறுளைந்தால்கிருத்திப்போடுஉத்தமனேயில்லாவிட்டால் மருந்தையுண்ணு-வுண்டபின்புபோகருடகடாட்சத்தாலேவிதமாகப்புலிப்பாணிவிளம்பினேனே (உகூங)

விளம்புகிறேன்நோய்தீரும் விபரங்கேளுவிதமானவாதமொடுவாதசூலை-தளம்புகிறேன்காலுகைமுடங்கிநாலுந்தலவில்லா*பட்சமென்பவாதம்போகும்-கிளம்புகிறேன்சீரணமும்பொருமல்திருக்கிருபையுடன்வயிற்றுவலி குன்மம்போகும் விளம்புகிறேன் போகருடகடாட்சத்தாலேஅன்பாகபுலிப்பாணிஅருளினேனே(

* பட்சவாதம்-பாரிசவாயு

## ரூதகச் செந்தூரம்.

அருளாலேயின்னமொன்றுசொல்லக்கேளு அடவானகெந்த கந்தான்விராகனென்று பொருளானரசமதுதான்விராகனென்று பொங்கமுடனிருசரக்குக்கல்வத்திட்டு - மிருளாலேசிற்றுமணக் கெண்ணெய்விட்டுமீறுமல்மெழுகதுபோலரைத்துருட்டி-திருளா லேநாற்பட்டுமேலேசுற்றிதிரமாகக்கொடிபோலப்பட்டைகேளே

கேளேநீபட்டையைத்தான் தண்ணீர்விட்டுக் கிருபையுடன் அரைத்தெடுத்துக்கவசங்கட்டி-நாளேநீபுகையினுள்ளே சிப்பித் தூளோநன்றாகத்தான்போட்டுமேலேவைத்துகூளேநீ மேலுமந்தப் பொடியைப்போடுசுகமாக * சில்விட்டுமண்சீலைசெய்து-தாளேநீ சாணுமியில் புடத்தைப்போடு தயவாகப்புடமிட்டுச் செந்தூர மாமே, (உ௬௭)

* சில்லு-புதியஓடு

* சாணுமியில்-சாண்உயரமுள்ளஉமியில்

ஆமப்பாநோய்களெல்லா மகன்றுபோகும் அடவாகதேகம துசிவந்துமின்னும்-போமப்பாபெரியோர்கள்கடாட்சஞ்செய்வா ர்பொங்கமுடன்தேவதைகள்கிருபை கூறுந்தாமப்பா சிந்தூரமு ண்டோர்க்கெல்லாம்தாழ்வொன்றும்வாராதுகர்மந்தீரும் - நாம ப்பாபோகருடகடாட்சத்தாலேநலமாகப்புலிப்பாணிபாடிநேனே

## கெந்தகரசாயனம்

பாடினேன்கெந்தகந்தான்வேணமட்டும் பாங்காகவாங்கிவந் துசொல்லக்கேளு-ஆடியகலசமதில்பசுவின்பாலை அடவாகத்தா னூற்றிப்புதைத்துப்போடு - கூடியேசிறுகலசந்தமர்கள்போட்டு குணமானபாற்கலசமேலேவைத்துநாடியேகெந்தகத்தையிதற்கு ள்ளிட்டுநாயகனேசில்லிட்டுசீலைசெய்யே (உ௬அ)

செய்தபின்புலகுபுடமதாகப்போடுசிறப்பானசெந்தியது தி றமதாச்சுகொய்தபின்புஅதையெடுத்துக்கழுவிப்போட்டுக் குழி யம்மிதன்னில்நீர்ப்பூண்டின்சாற்றில்-பெய்தபின்பதனைபரைப்பா ய்சாமமைந்துபாங்காகஅதையெடுத்து வைத்துக்கொண்டு-செய் தபின்புவிராகனிடைபாதிதானுந் தீவரமாய்ப்பனவெல்லாந்தன் னிற்கொள்ளே (உ௬௯)

கொள்ளவேமண்டலத்தில்குட்டரோகம்குணமானவெள்ளை யொடுகருப்புந்தீரும்-தள்ளவேசொறிசிரங்குமேகரோகந்தடிப்பு டனேசெவ்வட்டைக்கடிரணங்கள் விள்ளவே பத்தியந்தாநிதற் கோவில்லைவிதமானநெய்பாலுதயிர்மோருண்ணு அள்ளவேபோ கருடகடாட்சத்தாலேஅடவாகப்புலிப்பாணிப்பாடினேனே. ()

வேதுநீர்.

அருளாலேயின்னமொன்றுசொல்லக்கேளு அடவாகஆலாக இச்சிப்பட்டைபொருளாலேவகைவகைக்குபலந்தான்பத்து புகழ்ந்திடித்துப் பாண்டத்தில்போட்டுபின்பு திருளாலே மூன்றுடனேசலத்தைவிட்டுத்திறமாகக்காய்ச்சியதைமேலேவாரு இருளாதேயீராறுநாள்தான்வாருஇதமாகஅந்திசந்திமருந்தையுண்ணே.

உண்ணப்பாசிவநரந்தைவிஷ்ணுகாந்திஉத்தமனேஅரைத்து முள்ளிக்காய்விதம்பண்ணப்பாகொள்மூலமூளைகளெல்லாம்பதறியேயுதிர்ந்துவிடுங்கண்டுபாருநண்ணப்பா பத்தியங்கள்இதற்கோயில்லைநாயகனேயீராறுநாளுக்குள்ளே-திண்ணப்பாதீர்ந்துவிடுங் கண்டுபாருதிறமானபோகருடகடாட்சந்தானே. (௨௭௨)

பயித்தியந்திர

தானென்றசிறுகிரைவேரைத்தானுந்தானரைத்து எலுமிச்சங்காய்தன்விதம்வானென்றமூன்றுநாளாறுவேளைவளமாகவெந்நீரிற்கொடுத்துப்பாரு-கோனென்ற ஆறுநாளுப்பாகாதுகொற்றவனேயேழாநாளெல்லாமாகும்ஊனென்ற பயித்தியந்தான் தீர்ந்துபோகும்உத்தமனேபோகருடகடாட்சந்தானே. (௨௭௩)

தானப்பாஇப்பாகம்நீர்க்கடம்புவேரைதான்கொடுப்பாய்பயித்தியந்தான்தீரும்பாருவானப்பாதும்பைமிளகுபூண்டு வளமாகநசியமிடு ஆறுவேளைசினப்பாமயக்கமுதல் கிறுகிறுப்புசிறப்பான அருகினைவுந்தீர்ந்துப்போகும்-ஆனப்பாபோகருடகடாட்சத்தாலே அடவாகப்புலிப்பாணிப்பாடினேனே. (௨௭௪)

சகுனம

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு பணமில்லாதலைவிரித்தல்மொட்டையப்பா-நாடினேன்சன்னாசி செட்டிதட்டான்நலமானகுயவன்மூக்கரையன்செக்கான்கூடினேன் நாவிதனும்பிணிநோயாளன்குணமில்லாக்கட்டையொடுவிறகுயாக்கை- கூடினேன்கயிறு *கசக்கிரியுமாகாசுணைகெட்ட *வழிக்குண்டியாகாதென்

* சக்கிரி-எண்ணெய்வாணியன் [றே

* வழிக்குண்டி-கட்டுச்சோறு

ஆகாதுபுகையோடுபின்புதும்மம் அப்பனே அழுகையொடுமுசலுமாகா-வாகாதுநீர்ப்பானை யுடைத்துபோதுவழியிலேயடித்துவிழக்காணப்போகா - பாகாதுமரம்வெட்டல் அடியுஞ்சண்டைபண்பானகட்டிலொடுநாற்காலிமூக்காலி-சோகாதுஇவைமூன்றுமலர்ந்துகண்டால் சுருக்கப்பாமரணமொன்று சொல்லிப்போடே.

(௨௭௫)

போமேநீதேவதைகள்ராசாயானைபொலிவானபூஷணமாம்பெண்கள்பிள்ளைநாடேநீபூரணமாங்கும்பத்தோடுநலமானதயிரோடுபாலும்பானை-சூடேநீகுதிரையொடுவேதியர்கூட்டஞ்சுகமானகுடைசுருட்டிசிவிகைக்கள்ளு-ஆடேநீவெண்சாமரைசுகந்த புஷ்பம் அப்பனேவாத்தியங்கள் கேட்கநன்றே, (உ௭௭)

சுரங்களுக்குக்கியாழம்

நன்றாகஇன்னமொன்றுசொல்லக்கேளு நலமான தூதுவளைகண்டங்கத்திரிபன்றாகநிலவேம்பு முத்தக்காசுபாங்கான ஆடாதோடை விஷ்ணுகாந்திகுன்றாதபடகம்சீந்தித்தண்டுக்குணமானசிற்றாமுட்டிவேரினோடு அன்றாதசெங்தொட்டிமூலமப்பா அடவான வேம்புடையபட்டைதானே (உ௭அ)

பட்டையப்பா*முசுக்கைமாதளையின்வேரும்பாங்கான தும்பைப்பேப்புடலுங்கூட்டிநிட்டயமாய்நாய்த் துளசிவேருமையா நிசமாகவகைவகைக்குவிராகன்பத்துதட்டையாம்உரல்தனிலே யிடிக்கும்போதுதனியாகசரக்குவகைசொல்லக்கேளு-நட்டமாம்தேக்குதாளிசமாம்பத்திரிநலமானசுக்குடன்சிற்றரத்தையாமே, ()

* முசுக்கை-முசுமுசுக்கை

ஆமேதான்தேசாவாங்கிப்பிலியப்பா அடவாக வகைவகைக்குவிராகன்மூன்று-தாமேதானிவையெல்லா மிடிததுத்தோண்டிதயவாக ஆறுபங்குவைத்துப்பின்னே - வாமேதான்பாண்டத்திலெடுத்துப்போடுவளமாகரண்டுபடிசலத்தைவிட்டு - போமேதானெட்டொன்றாய்க்குறுக்கியப்பாபொங்கமுடன்மூன்றுநாள்கொடுத்திடாயே. (உஅ௰)

கொடுத்திடுநீமூன்றுநாளாறுவேளை குணமாகும்புளிபுகையுமோருந்தள்ளு - அடுத்திடவேகொடுத்திடுவாயிந்தபாகம் அப்பனேசுரமென்றதெல்லாந்தீரும் கடுத்திடுநீயிதுமிஞ்சி சுரமேவந்தால்கற்கமொன்று சொல்லுகிறேன்கனித்துகேளு - வடுத்திடுந்திப்பிலிசுக்கு சிற்றரத்தைவளமானதேசாவரங்கோஷ்டமாமே.

ஆமேதான்தேக்குஅதிமதுரங்கிராம்பு அப்பனேகருஞ்சீரம் வாய்விளங்கம்-போமேதான்தாளிசபத்திரியமாஞ்சுல பொங்கமுடன்மிளகுடனேஅக்கிராகாயம்- தாமேதான்*விடையதி* மதுரங்கூட்டிதயவாக வகைவகைக்கு விராகன்வாங்கி வாமேதான்பொன்னிறமாய்வறுத்துக்கொண்டு வளமாகப்பொடி பண்ணிவைத்துக்கொள்ளே (உஅஉ)

* விடையம்-அதிவிடையம்

* மதுரம்-அதிமதுரம்

கொள்ளே நீயிஞ்சியைத்தான் சுரசஞ்செய்து குணமாகவெருகடிதான்பொடியைப்போட்டு - அள்ளேநீமூன்றுநாளாறுவேளை அப்பனேகொடுத்தவுடன்நிரும்பாரு - தள்ளேநீயிதுமிஞ்சியதிகமானால் தயவானதோஷசன்னிஅடுத்துதானால்- சுள்ளேநீசின்னியுடன்மாவிலிங்கம் சுகமாகநொச்சியுடன் முருங்கையாமே, ()

ஆமேநீ ஆவிருடன்சங்கம்வேரும்அப்பநேஇந்தவகைப்பட்டையெல்லாம்-தாமேநீயிஞ்சியுடன்சிற்றரத்தைதயவாக இவையெல்லாம்கரசம்வாங்கி-வாமேநீ*பூநாகம்பொடிவறுத்துவகையாக விராகனிடைபொடியும்போட்டு போமேநீவெருகடிமூன் பொடியில்போட்டுபொலிவான தேனொருகாசெடைதான்வாரே.(௨௮௪)

* பூநாசம்-நாக்குப்பூச்சி

வாரேதான்முலைப்பாலு*முள்ளிப்பாலும் வளமாக*முசுறுமுட்டைப்பாலுஞ்சோறு கூரேதான்வெள்ளுள்ளிதயிலம் கொஞ்சம் குணமானபாலுடையயீண்டுகொஞ்சம்-நேரேதான்கோழியுடமுட்டைகொஞ்சம்நிச்சயமாய்க்கஸ்தூரிரோசினையுங்கூட்டி சாரேதான்கொடுத்திடுவாயாறுவேளைசாந்தமாய்ப்போகுமடா கண்டு பாரே. (௨௮௫)

* உள்ளி-வெள்ளிப்பூண்டு

* முசுறுமுட்டை-ஒருவிதஎறும்பின்முட்டை

பாரேநீவலிப்புடைய சன்னிதோஷம்பறக்குமடா இச்சுரங்கண்டபோதே-சேரேநீவிதியிருந்தால் பிசக்கும்பாருதிறமாக*சாத்திய*மசாத்தியமுங்காணும்- வீரேநீசத்தியந்தானிருந்தால்செய்நீ வீதமாய்சாத்தியமென்றால் செய்யொணாது- கூரேநீபோகருட கடாட்சத்தாலே சொற்றவனே புலிப்பாணிப்பாடினேனே(௨௮௬)

*சாத்தியம்-சவுக்கியம்* அசாத்தியம் நிலையின்மை

தளமகண்ட அவிழ்தம்

பாடினேன்தளமொன்றுசொல்லக்கேளு பாங்காகப் பொன் வெள்ளிபவழஞ்சிங்கி நாடினேனுமையென்ற வோடுமப்பாநலமானவில்லோடுவிளாவினோடு கூடினேன்கிராம்பு அதிமதுரஞ்சுக்குகுணமாகதேசாவாந்திப்பிலியரத்தை ஆடினேன்உருத்திராட்சமிவையெல்லாந்தான் அடவாகமுலைப்பாலிலுரைத்திடாயே ()

உரைத்தெடுத்து*மயிற்பீலிசுட்டச்சாம்பல்- உடன்சத்திநாவுதனித்தளமாய்ப்போட்டு கரைத்தெடுத்துநாவதனில்சலந்தானாறுங்கனிவில்லாதோஷமதுதணியும்பாரு மறைத்தெடுத்த பேய்துமட்டிவேரைத்தட்டி மைந்தனேகொடுத்துவிடு அடக்கிக்கொள்ளநுரைத்தெடுத்ததேகத்தில்வந்ததோஷந் துன்பமதுதான் விலகுங்கண்டுபாரே (௨௮௮)

* மயிற்பீலி-மயிலிறகு

தாகத்துக்குக் கியாழம்.

பாரேதான் விளாவிலையுமாடாதோடை- பாங்கானஅரசினு டக்கொழுந்துமப்பா-சேரேதான்வகைவகைக்குப் பிடிதானென் றுசிறப்பானமணலும்அரைபடிதான்போட்டு- கூரேதான்முந்திரி க்காய்மதுரந்தானும்-குணமாகவகைவகைக்குவிராகனென்று வீ ரேதான் இவையெல்லாம் கருகுமட்டும்விதமாகத்தான் வறுத்து தண்ணீர்வாரே. (உஅகூ)

வார்த்தப்பாதானெரிந்துக்குருக்ககாய்ச்சி- வடிகட்டிதான் கொடுப்பாய்தாகந்திருங்கோர்த்தப்பா யிந்தவித மூன்றுநாளுங் கொடுத்திடவேதாகமென்றதெல்லாந்தீரும்-பார்த்தப்பாசுரதாக ம்முஷ்ணதாகம்பரிவான அந்திரதாகம்பாவைதாகம்-போர்த்தப் பாகுடிநீரைகுடித்தபோது பொங்கமுடன்தீருமடா திண்ணந்தா னே. (உகூ0)

வாய்வுகளுக்கு,

திண்ணமாய்ச்சங்கம்வேர்மூக்கொழுஞ்சி - திரமானகொடி வேலிபரங்கிப்பட்டை-வுண்ணமாப்சுக்குடனேவாய்விளங்கம்வ ளமானசிறுதேக்குகொத்தமல்லி - எண்ணமாய்வகைவகைக்குவி ராகன்ரண்டு இடித்தெடுத்துபாண்டத்திலிதமாய்ப்போட்டு- கண் ணயமாய்ச் சலமதுதான்படிதான்விட்டுநாயகனே யொட்டொன் றுய்க்குருக்கிவாங்கே, (உகூக)

வாங்கியேமிளகதுவும்விராகனென்று வளமாகப்பொடிபண் ணியிதனிற்போட்டு-தாங்கியேவிளக்கெண்ணெய்துட்டெடைதா ன் விட்டுதான்கொடுப்பாய்மூன்றுநாளாறுவேளை-யேங்கியேபுளி புகையுந்தள்ளுதள்ளுவிதமானவாயுடனேமேகவாயு-வோங்கியே மேகடுப்பு புளித்தயேப்பம்-வோடிவிடும்வாயுவெல்லாந்தீருந்தா னே. (உகூஉ)

சூட்டுக்கு-குடிநீர்.

திருமேயின்னமொன்றுசொல்லக்கேளு திறமானஇளநீருப டிதான்மூன்று - ஆருமேஎளுமிச்சம் பழம்பழச்சார்நாழி - அப் பனேசுன்னநீர்த்தெளிவுதானும்-ஏருமேபடியரைதா னளந்துவா ரு இசையானகுமரிச்சார்பலந்தானாறு-வீருமேசீரகமும்பலந்தா னென்றுவிதமானஏலமரைப்பலந்தான்போடே. (உகூங)

போடேநீஏலமதைப்பொடித்துப்போடுபொங்கமுடன்புது ச்சட்டிதன்னிற்சேர்த்து-நாடேநீமணலிட்டுசாரஞ்செய்து- நாயக னேயிதுமேலேசட்டிவைத்துகூடேநீயிரச்சீலையதனால்மூடி - கு ணமாகவைத்திருநீபகற்காலந்தான்-சாடேநீராக்காலம் பனியில் வைத்து-சார்வ ;கமண்டலமூங் கால்தான்கொள்ளே. (உகூச)

கொள்ளவேகால்படிதானந்திசந்தி குணமாகக்குமரிச்சார்ப லமூங்காலு-உள்ளேநீகொண்டுவாஇந்தப்பாகம் உத்தமனேநீரெ ரிவுரத்தம்வெள்ளுதள்ளே நீயுள்ளெரிவுங்கடுப்புத்தீருந்-தப்பவில் லாகாங்கையது தணியும்பாருஅள்ளே நீபோகருடகடாட்சத்தா லே அடைவாகப்புலிப்பாணிபாடினேனே. (உகூரு)

வண்டுகடிதடிப்புக்குசவ்விரக்களிம்பு

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு - பண்பானவீரம து விராகனென்று-ஆடினேன்வெண்ணெயிலே போட்டரைத்து அடவாகமேல்பூசவகையைக்கேளு-கூடினேன்மேல்தனிலே மே கத்தாலே கொற்றவனேசொரிசொரியாய்ப்புள்ளிக்காணும்-நாடி னேனதையும்வண்டுகடிதானென்றுநாட்டிலேசொல்வார்களறிந் துபாரே. (உகூசு)

பூரக்களிம்பு.

பாரேநீபுள்ளியின்மேல் மூன்றுநாள்தான்பண்பாகத்தான்பூ சரணமதாகும்-சேரேநீரசமென்றபூரமப்பா செயலாகவிராகனி டைவாங்கிவந்து தீரேநீபசுவெண்ணெய் விராகனேந்தில்திறமாக த்தான்போட்டுஅரைத்துமைபோல்வீரேநீபூசிடவும் ரணங்களா றும்விதமானபோகருடகடாட்சந்தானே. (உகூஎ)

உஷ்ணகாங்கைக்குகுடிநீர்.

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு தயவான அறு கம்வேர்னெரிஞ்சில்வேரும்மானேதான்முருங்கையுட ஈர்க்குமப் பாமைந்தனேவகைவகைக்குப்படிதானென்று-வானேதான்பொ டிப்பொடியாய் நறுக்கிப்பொன்போல்வறுக்கையிலேசீரகமிளகு ம்போட்டு - ஆனேதான்கசகசாவிராகன்ரண்டு அப்பனே தான் போட்டுச்சலத்தைவாரே. (உகூஅ)

வாரேநீபடிசலந்தானெட்டொன்றுக்கிவளமாகப் பசுவெண் ணேக்கழஞ்சிப்போட்டுசேரேநீகொடுத்தவுடன் ஊஷ்ணகாந்தல் சேர்ந்துவந்தவயிர்வலிகடுப்புந்தீருங்கூரே நீயிந்தவிதமூன்றுநா ள்தான்கொடுத்திடவேஊஷ்ணத்தால்காங்கைதீருந்- தீரேநீபோ கருடகடாட்சத்தாலே திறமாகப்புலிப்பாணிசொன்னேன்தானே ஊஷ்ணம் காந்தல்.

குடைச்சலுக்குத் தயிலம்.

தானேயாமயிற்பீலிப்பலந்தான்ரண்டு தான்போட்டு சட்டியி லேகருக்கிக்கொண்டுவானேயாமனேசிலேதான்விராகன்பத்துவள மாகத்தான்போட்டுருருகும்போது-சேனேயாவேப் பெண்ணெய் ப்படிதான்விட்டு செயலாகத்தானெரித்துஎடுத்துக்கொண்டு-மா னேயாபூசியல்லோபிடிக்கும்போதுமைந்தனேகுடைச்சல் மூதல் குத்துப்போமே. (ஙூா)

போமேநீயிலைகள்ளிக்கொண்டுவந்து பொடிபொடியாகக்கண்டமதாய்நறுக்கிப்போட்டுநாமேநீசலமதுதான்பதக்குவிட்டுநலமாகஎட்டொன்ருய்குறிக்கிக்கொண்டு- தாமேநீமறுசட்டிதனிலிருத்து தயவாகவெள்ளாட்டுஅமுரிதானும் வாமேநீபடிரண்டுகூடவிட்டுவளமாகப்பாகுபோல்காய்ச்சிடாயே. (௲௱க)

காய்ச்சியே மேலெங்கும்பூசச் சொல்லிகனிவாக ஆட்டுத்தோல்-கலைத்தோல்தன்னில்-ஆச்சியேபடுத்திருக்கச்சொல்வாய்நீயும் அப்பனேசாயரட்சைதன்னிற்கேளுவாச்சியேநொச்சியிலைமுடக்கற்ருனும்வளமாகத் தழுதாழைமாவிலிங்கந்தாச்சியேமேனியுடன்தும்பைகொண்டுதயவாகபூவரசன்பட்டையாதே. ()

கலைத்தோல்யாண்மான்தோல்

ஆமேநீயெட்டியப்பாவட்டைவாகை அடவாக எருக்கம்பூகடம்பின்பட்டை-தாமேகாட்டெலுமிச்சைஇலையிநேடு தயவாகஉத்தாமணிதிருகுகள்ளி-வாமேதான்பிலுப்பையுடபட்டைதானும்வளமானநெல்லுமியு மிவைகளெல்லாம்- போமேதான்சலம்விட்டுவேகவைத்துப்பொங்கமுடன்மூன்றுநாள்போதவாரே. ()

வாரேதான் அந்தி சந்தி வார்த்தபோது வளமில்லா சூலையொடுபிடிப்புதானும்-மீரேதான்கால்குடைச்சல்மிகுந்ததொருமேல்கடுப்புக்குத்துதீரும்பாரேதான்சருவாங்கவாதம்போகும்பண்மானபுடைசூலைகாணபாதந்தீரேதான் போகருட கடாட்சத்தாலேதிறமாகப்புலிப்பாணிசொன்னதாமே. (௲௱ச)

மரந்தோஷத்துக்குளிகை.

தாமப்பாஇன்னமொன்றுசொல்லக்கேளுதயவானவில்வ மப்பாவிளாவும்வேளை வாமப்பாநாய்வேளைகஞ்சாங்கோரைமைந்தனேசின்னியொடுகாட்டுமொச்சைதேமப்பாதிருநீற்றுப்பச்சைதும்பைதெளிவானசிறுதும்பைகண்டங்கத்திரி வாமப்பாஅமுக்கராசங்குத்தாங்கிவளமானதுணைவேலிப்பருத்தியாமே. (௲௱ நு)

தாங்கிமலைதரங்கி.

ஆமேதான்முடக்கற்ருன் வெண்காவேளைஅடவானசாரணையுமுட்டைநாறி - தாமேதான்கொஞ்சிவேர்புண்ணுக்குப் பூடுதயவானபிரமியொடுசித்திரமூலம்-வாமேதான் கொவ்வையுடன் மணித்தக்காளி வகையானகையாணுங் கீழ்க்காய் நெல்லி - போமேதான்இந்தவகைமூலமெல்லாம்பொங்கமுடன்வகைவகைக்குகழஞ்சிதூக்கே, (௲௱கூ)

வெண்காவேளை வெள்ளைகொள்காய்வேளை
மூட்டைநாறி-எறிமூட்டைபீநாறி
கொழிஞ்சி கொள்காய்வேளை

தூக்கப்பாவசம்புடனே வோமஞ்சுக்குதுன்பமில்லா சதகு ப்பைதிரிகடுகுகூட, வாக்கப்பாதேசாவரமரத்தை கோஷ்டம்வ ளமானசாதிக்காய்வெள்ளைப்பூண்டு-ஆக்கப்பாதுருசுசீரகமுங்கா யம் அடர்கோரோசனைகருஞ்சீரகமுமம்பா - தாக்கப்பாவகைகவ கைக்குக்கழஞ்சியொன்று தான்தூக்கிகல்வத்திலரைத்திடாயே.

அரையப்பாஅப்பசசார்நாய்வேளைச்சார்அடவான அகத்தி ச்சாறிண்டம்பாலும்நுரை யப்பாசாமமதுமயனம் போலேதுரு சாகரண்டுபங்குஆக்கியப்பா-விரையப்பாதுவரைபோலுருட்டிப் போடு விதமாகவொருபங்கில்விபரங்கேளுஇரையப்பாசுத்திசெ ய்தவாளந்தானும் இதமாகக்கடுகுரோணியும்பாரே, (௫௱௮)

பாரப்பாவகைவகைக்குகழஞ்சிதூக்கிப்பாங்காக முன்மருந் தை யிதிலேசேர்த்துபாரப்பாஅகத்திச் சார்நிலவாகைச்சார்வள மாகவிட்டரைப்பாய்சாமமூன்று, வீரப்பாதுவரைபோலுருட்டி-ச்சேர்த்துவிதமாகநிழலுலர்த்தியெடுத்துக்கொண்டு-நேரப்பாகு ழந்தைகள்தன்பிணிகட்கெல்லாம் நிச்சயமாய்த்தான்கொடுக்கத் தீரும்பாரே, (௫௱௯)

பாரேதான்அப்பைசார்நாய்வேளைச்சார் பண்பானதுளசிச் சார்சிறுதும்பைச்சார்-வீரேதான்யெருமுட்டைநாறிச்சாறும் வி தமானகாட்டுமொச்சையிலைச்சாரப்பாகூரேதான் வயிறுகட்டிப் பிணிநோய்க்கண்டால்கொடுப்பாயே நேர்வாளஞ் சேர்த்தப்பா, தேரேதான்வயிரொடுத்துபிணிநோய்கண்டால்செலுத்திடுவாய்கு ளிகைஇச்சாரெதிலுந்திருந்தானே, (௫௱௰)

தீருமேமாந்தத்தின்வக்கைகள்யாவுந்திறமான தோஷமொடு வலிப்புகாய்ச்சல்-ஆறுமேஅக்கினியின்மாந்தமப்பா அன்பில்லா அனேகவிதநோயும்போகும் - கூருமேசிசுவருத்தந்தீர்ந்தோர்க் கெல்லாங் குற்றமொன்றுவருகாதுவறுமைநீங்கும்-வீருமேபோ கருடகடாட்சத்தாலே விதமாகப்புலிபபாணிப்பாடினேனே. ()

தாளகபற்பம்.

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளுபாங்கானஅரிதார க்கட்டியப்பா-கூடிநீகடுக்காய்த்தோல்நீராலாட்டிக்குணமாகமே ல்கவசம்வலுக்கச்செய்து-நாடினேன்குகையிலிட்டு சில்லுப்போ ட்டுநலமாகமண்சீலைவலுக்கச்செய்து- ஆடினேன்ரண்டெருவில் புடத்தைப்போடு அடவாகப்பற்பத்தைபெடுத்துக்கொள்ளே·()

ஆமப்பாபொடிப்பண்ணிவைத்துக்கொண்டு குணமாகதேன
திலேவிராகன்கால்தான்- அள்ளிநீகொடுத்தவுடன்சுரங்கள்யாவு
ம்அப்பனே அகன்றோடிப்போகும்பாரு- தள்ளவேநீயிருமலோடு
பாண்டுசோகைதயவில்லா யெலிக்கடியுந்திரும்பாரு- கள்ளேநீபி
த்தமொடுமருளுந்திரும்கனமானபோகருடகடாட்சந்தானே ()

மருள்-மயக்கம்

தானப்பாயுகையோடு புளியுந்தள்ளு தயவான ஏழாநாள்நீ
ரைவாருவானப்பாநீலிவேர் கியாழங்கொள்ளு வளமாகமற்றுநா
ளெல்லாங்கூட்டுகோனப்பாகுடிலங்களொன்றுமில்லை குணமாகு
ஞ்சயமுதல்சுரங்கள்போகும் தேனப்பா போகருடகடாட்சத்தா
லேதெளிவாகப்புலிப்பாணிசொன்னேன்பாரே. (௱௧௪)

குன்மவாந்தி-யேப்பம்-வாய்-நீருக்கு-கியாழம்.

பாரேநீயேலமொடுனெல்லிமுள்ளிப்பாங்கானபசுபயறுமிள
குகூடசேரேநீநெற்பொரியும்வில்வவேரும் சிறப்பாகவகைக்குவ
கைசொல்லக்கேளு-தீரேநீரண்டனைதான்பலமதாகதிறமாகத்தூ
ளாக்கி வைத்துக்கொண்டு கூரேநீரண்டுபங்கு குணமாய்செய்து
கொற்றவனேயிளநீரும்நேரம்ரண்டே

நெல்லிமுள்ளி-நெல்லிவற்றல்.

இரண்டான இளநீரின்சலத்திலப்பா அணுவளவுபிசகாமல்
மைபோலாடிகொண்டானயாண்டத்தில் லெட்டொன்றுக்கிகொ
டுப்பாயேயிராறுவேளைதன்னில் கண்டானகுன்மவகைவாந்தியே
ப்பங்கனி வில்லாவாய்நீரும்பொருமல் தீரும்பண்டானஅன்னம
துசெரிக்கும்பாருபாங்கானவரோசியமும்வலுப்பும்போமே ()

போமப்பாபத்தியந்தான்சொல்லக்கேளுபொங்கமுடனுப்பி
ட்டபருப்புமாகும்ஆமப்பா பசுவின்மோர் வெந்நீராகும்அடவா
னதூதுவளைபொன்னுங்காணிதாமப்பாகொடிவிளாங்காய்நெல்லி
க்காயுந்தயவானபசுவினெய்தேனுமாகும் வாமப்பாஏழாநாள்சல
த்தைவாருவளமாகபெட்டாநாள்புளியைச்சேரே (௱௧௭)

வயிற்றிரைச்சல்-பேதிக்கு

சேரேநீயின்னமொன்று சொல்லக்கேளுசெயலானமிளகுப
லமிரண்டுவாங்கிநேரேநீவே லியுடபருத்திச்சாறுநிறையவிட்டுவூ
ரவைத்துவுலரப்போடுகூரேநீ வறுத்துமிகப்பொடியாய்ச்செய்து
கொற்றவனேவேருகடியாய்த் தேனிற்கொள்ளவீரோநீவயிற்றிரை
ச்சல்பேதிநிற்கும்விதமானப்பொருமலுடவாயுபோமே (௱௧௮)

வயிற்றிரைச்சல்-இரத்தக்கடுப்புக்கு

போமேநீயின்னமொன்றுசொல்லக்கேளுபொலிவாகநீர்ப்பூண்டுபலந்தாள் ரண்டுஆமேநீயெழுத்தாணியிலேயைத்தானும் அடவாகரண்டுப லமெடுத்துக்கொண்டு தாமேநீநெய்தனிலேவதக்கிமைந்தாதயவானஏலமதுவிராக னென்றுவாமேநீசீனிபலமொன்றுகூட்டிவகையாகத்தானரைத்துஎடுத்துக்கொள்ளே. (௫௧௯)

கொள்ளப்பாமுள்ளிக்காய்வீதமாக கொற்றவனேமூன்றுநாளாறுவேளை-தெள்ளப்ப ாவயிற்றிரைச்சல்கடுப்புரத்தந்தெளிவில்லா.மூலத்தின்சூடுந்தீரும்- அள்ளப்பாபத்தியந்தானிதற்கோயில்லையப்பனேதயிர்பாலும் நெய்யுங்கூட்டுவிள்ளப்பா போகருடகடாட்சத்தாலேவிதமாகப்புலிப்பாணிப்பாடினேனே (௫௨௰)

முளைமூலத்துக்குகட்டு

பாடினேனின்ன மொன்று சொல்லக்கேளு பண்பானகோவையுட இலையைக்கட்டிநாடினேன் கம்மஞ்சோறுக்கிப் பின்னேநலமாகத்தானுருட்டிநீரைவாரு கூடுகிறேனெட்டுநாள்கடந்தசோறுகொறறவனே முன்னிலையுமடையாய்ச்சேர்த்து ஆடுமோறுநாள்கட்டும்போதுஅடியோடேமுளைமூலமகன்றுபோமே (௫௨௧

இராமபாணத்துக்குளிகை,

போமேநீயின்னமொன்றுசொல்லக்கேளுபொலிவானவெள்ளையுடன்காவிக்கல்லுஆமேநீசரி யெடையாய்நிறுத்துக்கொண்டுஅப்பனே வெற்றிலையின் சாற்றாலாட்டி தாமேநீ நாழிகையேழரையுமானால்தயவாகமிளகதுபோலுண்டைசெய்துவாமேநீசுக்குடைக்கியாழந்தன்னில்வளமாகமூன்றுநாள்கொடுத்திடாயே ()

வெள்ளை-வெள்ளைப்பாஷாணம்

கொடுத்தவுடன்சுரங்களெல்லாமோடிப் போகுங்கொற்றவனேயேழாநாள்நீரைவாரு அடுத்தவுடன்சிறுகீரைமிளகுநீலிஅப்பனேகியாழம் வைத்துக்கொடுப்பாய்நீயுங் கொடுத்தவுடனேழாநாள்புளிமைக்கூட்டுகழிவில்லாசுறவையது காணுதப்பாதொடுத்தவுடன்சுரக் குளிகைராமபாணந்து ளபமணிமார்பருடசரமுமாமே, (௫௨௩)

சுறவை-வீக்கம்,

கெந்தகரசாயனம்

ஆமேதான்கெந்தகத்தின்ரசாயந்தன்னை அடவாகச்சொல்லுகிறேனன்றாய்க்கேளுதாமேதான் திரிகடுகுகிராம்புயேலந்தனிலவங்கப் பட்டையுடன்லவுங்கப்பத்திரி வாமேதான்சாதிக்காய்தா

ளிசப்பத்திரிவளமானசிறுநாகப்பூவினேடுபோமேமோதான்விலாமி
சசன்வேரும்யோமம்பெறுஞ்சீரகங்குரோசானியாமே. (உஉச)

ஆமடாசிற்றரத்தைசிததிரமூலம்அடவானதிப்பிலிதன் மூல
த்தோடுநாமேநி பூலாங்கிழங்குயானைத்திப்பிலிநலமானகருஞ்சீ
ரங் கூகைநீரும்தாமேநீமுந்திரிக்கைசந்தனக்கோலந்தயவான அ
திமதுரம்முததக்காசும்வாமடாசடாமாஞ்சில் கொத்தமல்லிவ்ள
மானபேரீச்சம் பழமுமாமே (கூஉரு)

ஆமேநீதிரிபாலேசாதிபத்திரி அடவானவெட்டிவேர்குங்கும
ப்பூ தாமேநீநிலப்பனைவேர்அசுவகெந்திதயவானனெரிஞ்சிமுள்
ளுநீர்முள்ளிவித்துவாமே நீ பூனையென்றகாலிவித்து வளமாகவ
கைவகைக்குவிராகனுலுபோமேநீநிறுத்தெடுத்துப் பொடியாய்
செய்துபோங்சமுடன்சுத்திகெந்திபலமும்நாலே (கூஉசு)

நாலானபரங்கிப்பட்டைபாலில்சுத்திநாயகனேதூளு பலமி
ருபதாகப்பாலானசர்க்கரைதா னப்பாகேளு பாங்காகப்பலமது
தானிருபதாக கோலானசீனிசர்க்கரைதானப்பாகொற்றவனேப
லமதுதான்பத்ததாகும் மேலானநீரமிட்டான்கிழங்குஞ்சாறு வி
தமாகப்படியாறு பாண்டத்திட்டுசேலானபசுவினெய்படிதானெ
ன்றுசிவப்பானதேன்படிதானென்றுய்க்கூட்டே. (கூஉஎ)

கூட்டப்பாபாகதுபோல்பததைப்பார்த்து சொற்றவனேஇ
றக்கிவைத்துப்பொடியைப்போட்டு யாட்டப்பாகளறியதையெடு
த்துக்கொண்டு அப்பனேகுயக்கலசந்தன்னில்வைத்து காட்டப்
பாநெற்புடமும்பத்துநாள்தான்நலமாகத்தான்வைதது எடுத்துக்
கொண்டு ஊட்டப்பாகழர்ச்சிக்காய்வீதங்கொள்ளுஉத்தமனே தீ
ருநோய்விபரங்கேளே. (கூஉஅ)

தீரும்வியாதிகள்.

கேளேநீவாதமதுஎண்பதுக்குங்கெடியானபித்தமது நாற்ப
துக்கும்சூளேநீகிறிச்சினங்களாறுக்குந்தான் சுகமில்லாக்கிரந்தி
பதினெட்டிச்சூலேநாளேநீகுன்மமொடுபாண்டு சோகை நயமில்
லாசயரோகம்மேகமெல்லாம்வாளேநீ அக்கினியின் மந்தந்திரு
ம் வளமானபரிதிகண்ட இருள்போல்போமே. (கூஉகூ)

யோமடாபத்துநாள்கொண்டபின்புபொலிவானபத்தியந்தா
ன்சொல்லக்கேளுஆமடாபசும்பயறுதுவரையாகும் அப்பனேதூ
துவளைமணத்தக்காளிதாமடாகத்திரிக்காய் முருங்கைப்பிஞ்சுதய
வானகொத்தமல்லிக்கீரையாகும்வாமடாபுளியுப்புபசுவினெய்யு
ம் வளமானமோர்தயிரும் பாலுமாமே. (கூகூ0)

### வலிகளுக்குசாதிலிங்கக்கட்டு

ஆமேநீயின்னமொன்றுசொல்லக்கேளு அடவாக அஞ்சுண்டம்வெண்கருவைவாங்கிப்போமேநீவீரமதுபச்சைப்பூரம் பொலிவானவெடியுப்புசுண்ணத்தோடுவாமேநீவகைவகைக்கு விராகனொன்றுவளமாகபொடிப்பண்ணிவெண்கருவில்போட்டுஓமே நீமஞ்சளுடகருவைப்போக்கிஉத்தமனேவெண்கருவை யடைத்துவையே. (௩௩௧)

அஞ்சண்டம்அஞ்சுகோழிமுட்டை
பச்சைப்பூரம்பச்சைகற்பூரம்

வையப்பாஆறுநாள்கடந்தபின்புவகையாகலிங்கமது விராகன்பத்துகையப்பா வெண்கருவில்தோய்ததுகனிவாகரவிதனிலே கணக்காய்பத்துபையப்பாகருமத்தின்தழைமேல்சுற்றிப்பாகு மணற்புடந்தான் முப்பதிரண்டுசெய்யப்பாயிந்தவிதந் தோய்ந்துச்சுற்றி செயலானஒன்றொருமுப்பத்திரண்டே. (௩௩௨)

கருமத்தின்தழைகறுப்புஊமத்தின்தழை

இரண்டானபுடந்தனக்கு உபரியென்றுரோகிப்பாய்புடம்பத்து ஏற்றிக்கொள்ளு கண்டானலிங்கமது உருக்கிக்கட்டுங் கனிவாகத தானதையே யெடுத்துக்கொண்டு பண்டான இஞ்சிச்சுரசந்தன்னிற்கொள்ள பணவிடை தான்கணக்காகவு ரைத்துப்போடுதெண்டானமூன்றுநாளாறு வேளைதிண்ணமாய்த்தான்கொக்கத்திரும்பாரே (௩௩௩)

உபரிமேல்திண்ணம்பலம்

### தீரும்வியாதிகள்

பாரேநீமுசல்கண்டன்குமரகண்டன்பரிவானமுசல்வலியன்குதிரைக்குட்டிசேரோநீகாக்கைவலிபிறவிச்சோடுசிறப்பான உள்வீச்சுசன்னிதோஷம் கூரோநீவாலைவென்றசிறுக்கை யோடுகுணமானநெஞ்சுமுதல்வாயுக்குத்து வீரோநீஇவைகளெல்லாந் தீரும்பாருவிதமானஇருள்கண்டசுடர்போல்போமே (௩௩௪)

சிறுக்கை-பயித்தியம்

### பரங்கிப்பட்டைரசாயனம்

போமப்பாஇன்னமொன்றுசொல்லக்கேளுபொலிவானசங்கம்வேர்சங்கன்குப்பியாமப்பாகொடி வேலிவேரினைநி அடவானநிலப்பனைவேரசுவகெந்திதாமப்பாஇருகுமிழிநெரிஞ்சில்வேருதயவானபூவரசம்பட்டையாகும் வாமப்பாசெங்கத்தாரி பட்டையோடுவகைவகைக்குத்தூள்செய்துபலந்தானென்றே (௩௩௫)

இருகுமிழி-குமிழியம்-நீர்குமிழம்

ஒன்ருனதிரிகடுகுவோமங்கோஷ்டம் உத்தமனேகேசரமும
ரத்தையிஞ்சிநன்ருனசிறுலவங்கப்பட்டையோடுநாயகனேலவங்
கமென்றபத்திரிக் கூடபன்ருனவகைவகைக்குஅரைப்பலந்தான்
பாங்கான பரங்கிப்பட்டைபலந்தானைந்து- கன்ருனசர்க்கரைதா
ன்பலமேபத்துகனிவானநெய்தேனும்நாழிவாரே (௩௩௬

வார்த்தேநீ பிசைந்துநன்ருய்க்கலசந்தன்னில்வளமாகத்தா
னடைத்துவைத்துக்கொண்டுபார்த்தேநீநல்லநாள் தன்னிற்கொ
ள்ளபாங்காகமுள்ளிக்காய்வீதமாகச்சேர்த்தேநீயந்தி சந்திநாற்ப
துநாளப்பாசெயலாககொண்டிடவேதீரும்நோய்கள் கார்த்தேநீ
பத்தியமோ மிளகுகடுகுமாகா கனிவானவாழையிலேகரப்பான்த
ள்ளே. (௩௩௭)

தள்ளையிலேமேகமெல்லாம் பறக்கும்பாரு தயவில்லாசூலே
யொடுவிரணரோகம்-அள்ளையிலேகிரந்திவகை வாயின்ரோகம்
அடவானகுஷ்டமொடுபிரமியங்கள்தெள்ளையிலே குன்மமொடு
வாயுமூர்ச்சைதெளிவில்லாவாய்நாற்றமக்கினிமந்தம் - விள்ளையி
லே பரங்கிப்பட்டைரசாயனந்தான் விண்ணவர்கள்மருந்துண்ண
க்கொள்ளலாமே. (௩௩௮)

சீரகச்சூரணம்.

கொள்ளவேயின்னமொன்றுசொல்லக்கேளுகுணமானசீரக
மேபலந்தானைந்துதெள்ளவேவாங்கிவந்துபிங் கான்தன்னில்தெ
ளிவாகத்தான்போட்டுபழச்சார்வாரு-அள்ளவேமிதக்கவிட்டுஊ
றவைத்துஅடவாக நீழல்தனிலேயுலரப்போட்டு விள்ளவேதா
னெடுத்து இந்தபாகம்விதமாகத்தான்போட்டுவிபரம்பாரே. ()

பாரேநீகருப்பான்சார்முசுமுசுக்கைபாங்காக நெல்லிக்காய்
ச்சாருங்கூட-சேரேநீதூதுவளைச்சாற்றிேைடு செயலானவேம்பி
ன்பட்டைச்சாருமாகும் - தீரேநீதும்பையிலேச்சாரும்விட்டுதிற
மாக வெவ்வேருய்யுலரப்போட்டு-சீரேநீதூளிடித்துவடிதான் க
ட்டி சீனியதுகால்பங்கு கலந்துக்கொள்ளே. (௩௪௰)

கொள்ளப்பாஅந்திசந்திநாற்பதுநாள்கொள்ளகுணமாகவெ
ருகடிதான்விதம்பாரு - தெள்ளப்பாபித்தமெல்லா மகன்றுபோ
கும் தெளிவில்லாகிறுகிறுப்புவாந்திதீரும்உள்ளப்பா அக்கினி
யாமந்தந்திரும் ஊஷ்ணமாங்காங்கையெல்லாமகலும்பாரு- விள்
ளப்பா போகருடகடாக்ஷத்தாலே விதமாகப்புலிப்பாணிபாடி
னேனே. (௩௪௧)

அரிதாரபற்பம்.

பாடினேனரிதாரப்பற்பந்தன்னைப்பண்பாகச்சொல்லு கிறே
ன் பரிந்துகேளு-நாடினேனரிதாரக்கட்டிதன்னைநலமானகற்சன்

ணைந்தன்னிற்கிற்றி-தேடினேன்மேனியிலேக்கல்லுச்சுண்ணம் சேர்ந்தரைப்பாய் சமன்கொண்டுமைபோலாட்டி- சூடினேன்சட்டியின்மேல்கவசங்கட்டி-சுகமாகமண்சிலைவலுக்கச்செய்யே ()

செய்யப்பா* சுக்குடத்தில்நீறிப்போகுஞ்செயமான பற்பத்தையெடுத்துக்கொண்டு-வையப்பாசயங்கள்விஷயாகம்பாண்டுவளமானசுரங்களொடுபித்தரோகம்-கையப்பாளவிக்கடியும்பயித்தியந்தீருங்கருதானபற்பமிது அறிந்துக்கொள்ளு- மெய்யப்பாபோகருடகடாட்சத்தாலே நிசசயமாய்வைத்தியத்தைச்செய்துபாரே. ()

* குக்குடம்-கோழியளவுபுடம்.

சகலரோகத்துக்குஞ்-சூட்சகுளிகை

பாரடாரசமுங்*கிரிபாலைகெந்திபண்பானமிளகுடனேகடுகுஞ் சேர்த்து-நேரடாபொடியாக்கிப்பனையின்வெல்லம் நேர்சேர்த்துசுண்டக்காய்போலேயுண்டை- வீரடாவொருவுண்டைவுதயந்தன்னில் விழுங்கிவிட்டுகெடிகையாநேரஞ்சென்று-சீரடாஆவின்பால்படியுங்கால்தான்-சிறப்பாரத்தான்குடிப்பாய்திண்ணந்தானே. (௱௪௪)

* திரிபாலை-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்.

தானேதானிந்தவிதம் நாற்பத்தெட்டுநாடவாகநாட்கொள்ளத் தீரும்நோய்கள்-மானேதான்குஷ்டமொடுகுன்மஞ்சூலை மைந்தனேபெருவயிறும்பிரமைபித்தம்-கோனேதான்குலைநோவுசொரிமாறுங்,கொடிதானபத்தியந்தானில்லைப்பாரு-நானேதான்போகருடகடாட்சத்தாலேநலமாகப்புலிப்பாணிபாடினேனே, ()

பித்தபயித்தியத்துக்கு-பற்பம்.

பாடினேன் நாய்மண்டைமாட்டுமண்டைபாங்கானமனுஷருடமண்டையோடு-நாடியேசரியெடையாய்க்கல்வத்திட்டு நலமானகழுதைப்பால்தன்னாலாட்டி-ஆடியமைபோலவழித் தெடுத்து அடவாகவில்லைதட்டியுலரபோட்டு தேடியேகுக்குடத்திற் புடத்தைப்போடுதெளிவாகப்பற்பமதுதவளமாச்சே (௱௪௬)

ஆச்சப்பாகழுதைப்பால்துட்டெடைதான்ரண்டு-அடவான இஞ்சிசார்துட்டெடைதான்விட்டு - வாச்சப்பாசற்கரைதுட்டெடைதான்போட்டுவளமானபற்பமதுகழஞ்சிகூட்டுயேச்சப்பா கொடுத்துவிடுசாறுவேளையெழுந்தபித்தபயித்தியமும் பிரமையேவல்போச்சப்பாதேவதைகளிற்கோவிடுபுதைபில்லி வைப்புமுதல்தீருந்தானே, (௱௪௭)

பில்லிபயித்தியத்துக்கு.

தானென்மகழுதையுட இடபாகத்தில்தான்வளர்ந்தசடையுடனேபாம்புச்சட்டை-மானென்ற வேப்பெண்ணெய்செஞ்சிலை௬

ற்சுமைந்தனேசுடரென்றதயிலம்வாங்கிவோனென்றவுள்ளுக்குக்
கரண்டிவீதங்கொடுத்திடுவாய்மூன்றுநாளாறுவேளை-தேனென்ற
மேலுக்கும் பூசுபூசுதெளிவாகும்பில்லிபயித்தியந்தானாறே ()

## சகலரோகத்துக்குச் சித்திரமூலஎண்ணெய்.

ஆறுதசூட்டுக்குஎண்ணெய்சொல்வேன்அடவாகஎள்ளெண்
ணெய்பாவினெய்யும் கூராதவகைவகைக்குப்படிதான்பாதி கொ
டிதானசித்தருடமூலப்பட்டை-நேராதப்பலமொன்று நீர்விட்டா
ட்டிநேராகஎண்ணெயிலேகலக்கிப்போட்டுமீறுதமெழுபதந்தனி
விறக்கிமிஞ்சாமல்துட்டெடைதான்கொண்டுபாரே. (௧௪௯)

## மூலப்படை-சித்திரமூலப்பட்டை

பாரேநீநாற்பதுநாள்கொண்டபோது பாங்கான சூடெங்கே
மேகமெங்கே-வீரேநீவிப்புருதிகண்டமாலைவிதமான பண்புறைக
ள்சிரங்குந்தீரும்தீரேநீவாயுவொடு சூலைக்குத்துதிறமானசெங்கி
ராங்கிதடிப்புமாறும்சேரேநீபயித்தியந்தானிதற்கோஇல்லைசெ
யலானபோகருடகடாட்சந்தானே (௧௫௰)

## ஆக்கிராணம்

தானானயாக்கிராணஞ்சொல்வேன்கேளுதபவானசுண்டவே
ர்சித்திரமூலம்-வானான அஞ்சிவேர்கண்டங்கத்திரிசூளமானதூது
வளைமுளகரணைவேளை-மானானயாடுதொடகுப்பைமேனி வளமா
னவெள்ளைச்சாரணையும்வேலிபானான வகைக்குவகைவிராகனெ
ன்று பண்பானஎருக்கிலையுஞ்சுனையின்பாரே (௧௫௧)

பாரேநீசமுத்திராப்பழமுஞ்சுக்கு பாங்கானஅக்கிராகாரம்
ஓமம்சேரேநீஅதிவிடையம் * அரத்தைகாயஞ்செயலானதிப்பிலி
யுந்திப்பிலிமூலம்வீரேநீதேசாவரங் கஸ்தூரிமஞ்சள் வீறானவா
ல்மிளகுகடல் நுரையுங்கடுகுதீரேநீகுராசானியோமம*ரோகணி
திறமானகருஞ்சீரம்பேரரத்தைதானே (௧௫௨)

* அரத்தை-சிற்றரத்தை
* ரோகணி-கடுகுரோணி

காணேநீவசம்புவேப்பரிசியோடு சுளிவான சாம்பிராணிவ
கைவகைக்கு-தானேநீவிராகனிடைனிறுத்துக் கொண்டுதயவாக
ச்சரக்கெல்லாமொன்றாய்க் கூட்டிபாணேநீயத்தியின்பால் வெள்
ளாட்டுநீரும்பாங்காகபிசறிவைத்து உலர்த்திக்கொண்டு-மாணே
நீபொடித்துபேய்ச்சுரைகுடுக்கைமைந்தனேநூளடைத்து வைத்
துக்கொள்ளே (௧௫௩)

கொள்ளவேபணவெடைதானுசிக்கேற்ற கொற்றவனே சன்னியதுவிலகும்பாரு, அள்ளவேகாகிதத்தில்வைத்துச்சுற்றி அடவாகஙிம்பஎண்ணெய்தனில்வைத்து, மெள்ளவேபொருந்தியதை யாற்றிப்போட்டுமேன்மையால் புகையதனைநாசிக்கேற்று தள்ளவேசிரசிலுள்ளவியாதிதீரும் தலைவலியுமொருதலையுமிடிப்புபோமே. (ருஉச)

போமேநீர்ப்பாச்சல்சயமும்பித்தம்பொல்லாதகபாலத்தின் சூலைவாயு, ஆமேநீபீநசமுஞ்சகலதோஷம் அடவானமண்டைகுத்துகெர்ப்பநோயும்தாமேநீசிரசிலுள்ள வியாதிகளெல்லாந்தாக்கடாஇப்புகையைச்சண்ணுஞ்சண்ணும் வாமேநீயின்னமொருகூட்சஞ்சொல்லேன்மாருதரணங்களுக்குவழுத்துறேனே. (ருஉரு)

இரணங்களுக்கும்புகை.

வழுத்துறேன்கண்டத்தின்மேலேயுள்ள வாயுமுதல்கண்செவியின்நோயுந்திரும்பழுத்துறேன் பற்கிட்டுசென்னிதோஷம் பாங்கானமுனிகருப்பொதிவானுலுங்கொழுத்துறேன் பணவெடைஆக்கிராணத்தோடேகுணமான நவாச்சாரநேரோசேர்ந்து சழுத்துறேன்கற்சுண்ணங்கொஞ்சங்கூட்டிசுருக்காகமத்தித்துநாசிக்கேற்றே. (ருஉகூ)

எற்றேநீஆக்கிராணங்கழஞ்சியொன்று இதமான அரிதாரம் லிங்கம்பூரம் பாத்தேநீகொடிக்கள்ளிப் பட்டைதானும்பாங்கான கழுதைலத்திபொடியுமப்பா போற்றேநீவகைவகைக்குகழஞ்சிஒன்றுபொங்கமுடன்திருகுகள்ளிப்பாலாலாட்டி சேர்த்தேநீயுலரவைத்துயெடுத்துக்கொண்டுசெயமானயுங்குழுளிதன்னிற்கேளே.

கேளேதான்தணிலே பொடியேபோட்டுகெடியான புண்களிலேபுகைதான்சார, சூளேதான்வெடுசூலைமேகவட்டைசுடுக்கிரந்தியாயாப்புபௌத்திரங்கள்கோளேதான் இப்புகையில்திரும்பாருகொற்றவனேபொடியெடுத்து அலரிப்பாலில்நாளேதான்மத்தித்து இரணத்தில்போடநாயகனே இரணங்களெல்லாந் தீருந்தானே. (ருஉஅ)

சூட்டுக்குமுழுக-தாமரைத்தைலம்

தானுன்எள்ளெண்ணெய்ப்படிதானென்றுதகைமை குளிர்த்தாமரைச்சாற்படிதானென்றுபானுனடதந்தனிலேகாய்ச்சியப்பாபக்குவமாய்கீழிறக்கித்தானேவைத்துமானுன பூலாக்கிழங்குப்பச்சிலையுமப்பாவகைவகைக்குவிராகனேந்துநிறுத்துக்கொண்டுதேனுகப்பொடிப்பண்ணித்தூவிப்போடுதெளிவாகவடித்திறுத்துமுழுகுவாயே (ருஉகூ)

முழுகையிலேசூடெல்லாந் தணிந்துபோகு முன்னிலையாக ண்ணெரிவுகுளிர்ச்சியாகும்பழுகாது திரேகமதுபொன்போல் மின்னும்பண்பானநீர்கடுப்புவினையுந்தீரும்- அழுகாதுவிந்துவுக்கே இருக்கும்பாரு அடவாகமூலத்திற்சூடும்போகும்-நழுகாதுசூலையுடகருணைவாங்கு நலமானபோகருடகடாட்சந்தானே (௫௬௰)

வைத்தியமுப்பு.

தானனவைத்தியமுப்பூமார்க்கம்தயவாகச் சொல்லுகிறேன் தருமமாக-கோனனபங்குனிசித்திரையில்பூனீர்க்கொற்றவனேமணபடாதெடுத்துவந்து -மானனநாலுபடிபாண்டத்திட்டு மைந்தனேகடலுப்புபடிதான்ரண்டுவானனகற்சுண்ணம்படிதான் ரண்டு வளமான அமுரியதுபடிதானெட்டே. (௫௬௧)

எட்டதுதான்வார்த்தபின்பு எள்ளெண்ணெயப்பாஇதமாகபடி அரைதான்அளந்துவாரு- தொட்டதுதான் கலக்கியதைதெளிவிறுத்துதோணவேஉப்பாருமட்டுங்காய்ச்சி விட்டதுதான்அமுரிபடியெட்டேவிட்டுவிகமாக இவ்விதமாய்ப்பத்து முறைகாச்சு-பட்டதுதான்குழம்பதுபோலாகும்பாருபாங்கான எருச்சாம்பல் சொல்லக்கேளே (௫௬௨)

கேளேதான்யெருச்சாம்பல்பரப்பிமைந்தா கெணிதமுடன் சல்லாவைவிரித்துப்போட்டு - நாளேதான்இதில்வாரு இறுகும் போதுநலமாகஉண்டைகாயுருட்டிப்போடு - சூளேதான்ரவியில் வைத்துஎடுத்துக் கொண்டுசுகமாகநெற்பிசரி ஒருபாண்டத்தில் வாளேதானதைப்பாண்டமதனில்விட்டு வளமாகஅதன்மேல்மல்லிகையினிலையே. (௫௬௩)

மல்லிகையினிலைபரப்பியிந்தவண்மை மைந்தனே மேல்வைத்துஇலையால்மூடி-அல்லியேயதின்மேலே நெல்லிட்டப்பா அடவாகசட்டிகொண்டுமூடியெரி-வல்லியேநெல்லுவெந்தபின்னெடுத்துவைத்து வளமாகசிப்பிநாறிறச்சியொக்ககல்லியே துவாரமிட்டுச்சொல்லக்கேளுகருத்தாக*வீரம்பச்சைபூரந்தானே ( )

* வீரம்-சைவீரம்

பச்சைபூரம்-பச்சைக்கர்ப்பூரம்

தானனபூரமுடன்பூனீரப்பாதயவாகவகைவகைக்கு விராகன்மூன்றுகோனன இவைநான்கும்பொடியாய்ச்செய்துகொற்றவனேசிப்பியதுவாரந்தன்னில்மானன சிப்பிதொறுகொஞ்சம்போடுமைந்தனேசட்டியின்மேல்பரப்பிவைத்து-பானனசெயநீரும்இறங்கும்பாருபாங்காக இதையெடுத்துப்பதனம்பண்ணே. (௫௬௫)

பண்ணப்பாநாதவிந்தாரண்டுசாணும் பண்பான இளநீருஞ்ச மனையச்சேர்த்து நண்ணப்பாடபடுவண்டு உரமுஞ்சூதம்நலமாகக் கூடிப்பச்சைபூரம் உண்ணப்பா ஆறுபுள்ளிவண்டின்முட்டை உத்தமனேசின்முடன்சாரமப்பா - வண்ணப்பாவகைவகைக்கு பண வெடைதான்வீதம்வகையாகப்பொடிப்பண்ணியிளநீரிற்போடே

சாரம்-நவாட்சாரம்

போடேதான்தெளிவிறுத்தண்டைதன்னை பொங்கமுடன்இளநீரால்சாமமாட்டிபாடேதான்வில்லை தட்டிரவியில்போட்டு அடவாககாய்ந்தபின்புசொல்லக்கேளு - நாடோதான்பேரண்டம் பொடியதாக்கி நலமானவோட்டின்மேல்பரப்பிவைத்து -- கூடே தான்அதன்மேலேவில்லைவைத்து குணமாக அதன்மேலே பொடியைப்போடே. (௨௬௭)

போடப்பாமேல்மூடிச்சீலைசெய்து புனிதமுடன்பத்தெருவில்புடத்தைப்போடு சாடப்பாஇம்முறையாய் ஐந்துபோடு கசடறவேசுண்ணமாயிருக்கும்பாரு-பாடப்பா பேரஞ்சிற்றண்டத்தோடுபாங்கானசிப்பிநண்டோடுநத்தை- மாடப்பாஇதையெல்லாம் வெவ்வேறாகமைந்தனேசிற்றண்டைக்கருவாலாட்டே. (௨௬௮)

பேரண்டம்-தலைவோடு

சிற்றண்டம்-கோழிமுட்டை

ஆட்டியேஉலரவைத்துஉலையிலூத அப்பனே அஞ்சுதான்சுண்ணமாகும்-நாட்டியேஅஞ்சுண்ணஞ்சமனாய்க்கூட்டி நலமாகமுன்விட்டசெயநீர்விட்டு கூட்டியேதானரைத்துக் குகைபிடித்துக் குணமாகசில்லுசெய்துமுன்சுண்ணத்தை-வாட்டியே செயநீரால் மைபோலாட்டிவளமாகத்தான்ரவியிலுலரப்போடே (௨௬௯)

போடேநீஅஞ்சுசுண்ணக்குகையில்வைத்து போதகமாயஞ்சுசுண்ணஞ்சில்லும்போட்டுயாடேநீ சுண்ணும்புச்சீலைசெய்துஅடவாகப்புடம்போட்டுஎடுத்துக்கொண்டு-நாடேநீஅஞ்சுதரமிந்தபாகம்நலமாகப்புடம்போட்டுஎடுத்துக்கொண்டு-மாடேநீநாதாக்கள் சாபந்திரமைந்தனேயாத்தாளைபூசைபண்ணே (௨௭௰)

பண்ணவேசுண்ணத்தால சுண்ணமாகும்பாங்கான செந்தூரம்மெழுதமாதங்-நண்ணவேகட்டின முறுக்கினமுமாகும் நலமானசரக்கெல்லாம்பற்பமாகும்உண்ணவேலேகியங்கள்கிருதம்எண்ணெய்உத்தமனேபவிழ்தமெனவகைகட்கெல்லாம் - எண்ணவே பணவிடைதான்கூட்டவேண்டுமில்லாவிட்டாலவிழ்தமதுவீறில்லாதே. (௨௭௧)

இல்லாதநோய்கள்தான்சடத்தில்மேவும்ஏதென்றால் பஞ்சபாதகத்தால்காணும்-பொல்லாதகர்மவினைதீரவேண்டிப் பூட்டு

றேன்சாந்திபொன்றுசொல்லக்கேளுவல்லான ஒடுநீர்கலசந்தன்னில்வளமாகக்கொண்டுவந்துதாம்பைபோட்டுசெல்லானகலசந்தைமேலேவைத்துசெயலான*அக்குமணிசேர்த்துக்கட்டே. ()

* அக்குமணி-பலகரைமணி

கட்டப்பாமாவிலையைமேலேவைத்துசலவான மஞ்சளைதான்வளைத்துவைப்பிபட்டானமுக்கோணகலசத்துள்ளே பாங்காகத்தானிட்டு சிகாரம்நாட்டிமட்டானசேர்பாலித்தன்னைத்தானமன்னவனே முன்னேவைப்பாய்மதியந்தன்னில்வட்டிப்பாதூபமோடுதீபங் காட்டிவளமானவில்வமது நாற்பெட்டாமே. (௫எ௫)

ஆமப்பாஓமமொன்றுஅர்ச்சனையுஞ்செய்து அடவாசகலசநீர்சிரசில்வார்த்துதாமப்பாஒருசிங்கையுள்ளுக்கிந்து தயவாகவில்வமதுமூன்றுநாள்கொண்டால்ஓமப்பாஅருக்கன்முதல்சனிநாள்தட்டு மொடுக்கமாயிப்படியேசெய்தாயானும்போமப்பாபஞ்சபாதகங்களியாவும்பொல்லாத பிரமைபிணியேவல்போமே. ()

* அருக்கன்ஞாயிற்றுக்கிழமை

நோய்க்கும்பேதிக்கும்ஓமசாந்தி

போமேதான்ஓமத்தின்சாந்திகேளு பொங்கமுடனேந்துபடியரிசிக்கொட்டி ஆமேதான்பச்சரிசிமேலேகேளு அடவானதிரிகோணம் வித்துபோட்டுகாமேதான்றீங்காரமுள்ளேபோட்டுதயவாக்கும்பமைந்தில் தனிநூல்சுற்றி வாமேதான்சலமது தானிறையவிட்டுவளமானசொர்னமென்றுகூடப்போடே. ()

போடப்பாஇருபதந்தைந்தரையுமாறிபொங்கமுடன் மாவிலையுந்தேங்காய்வைத்து ஆடப்பாசந்தனத்தைக்கரைத்துசாந்தி*அட்சதையுஞ்சுகந்தபரிமளங்கள்பூசி- நாடப்பாபட்டுவஸ்திரங்கள்சாத்திநலமானபுட்பமர்ச்சனையேசெய்துஈடப்பாபழந்தேங்காய்த்தாம்பூலங்கள் இதமானபலகாரமிளனீரில்பாலே, (௫எ௬)

* அட்சதைமஞ்சளரிசி

பாலுடனேபாணக்கம்வஸ்துவோடுபரமானம் அவலுடனேசத்தியண்டம்எளவுடனே பொரிகடலைசர்க்கரைமாவிளக்குஇதமானவெண்ணெபொங்கல்பசும் பருப்புசேவலுடனேயித்தனையுமிலைதான்போட்டுசெப்பமுடன்பரிமாறிதூபம்போடுபாலுடனேவோமகுண்டஞ்*சமித்தைகேளுமைந்தனேமாவிலிங்கம் விளார்த்தியாமே, (௫எஎ)

* சுத்திமாங்கிஷபொரியல்

* சமித்தைகள்விறகு.

ஆமேநீவில்வமொடுஎட்டிநொச்சி அடவானமாவோடுஓமம்
நெய்யாம்தாமேநீஅக்கினிநமாவென்றேதான் தயவாகசமித்துக்
காயிரத் தெட்டோதிபோமேநீயெள்ளுழுந்து கடலைமொச்சைப்
பொலிவானதுவரைபசும்பயற்றினோடுவாமேகாராமணியும்அரிசி
கோதும்பைவளமாக ஒன்பதையும் ஓமம்பண்ணே. (௩.௭௮)

அரி-சரிசி

பண்ணப்பாதேன்பாலுவஸ்துசுத்திப்பாங்கானபழந்தேங்கா
ய்பலகாரங்கள்நண்ணப்பா இளநீர்சர்க்கரைபானக்கம்நலமானத
யிர்ச்சோறு நெற்பொரியுங்கூடவண்ணப்பாஅக்கினிக்காகுதியே
பண்ணவஞ்சனைமுறைப்பாடுந்தேவர்குற்றம்ஒண்ணபபா அசுத்த
சுத்தகணமும்பூதம் உத்தமனேபஞ்சபாதகமும்போமே. (௩ ௮௯)

போமடாபில்லிவஞ்சனையும்ஏவல் பிரமையொடுவியாதிமு
தல்பசாசுபேயும்ஆமடாமுனிகறுப்புலாடன்காட்டேரிஅடவான
பெய்ச்சிகந்துருவர்மூர்த்திதாமடாசாத்தனொடுஇருளனையன் தய
வில்லாசப்பாணியிருதலையின்கொள்ளிஓமடா இன்னம்வெகுபசா
சாளுலும்ஓமத்தில் கண்டுவிடுங்கண்டுபாரே (௩ ௮௱)

கண்டு*கும்பன்மந்துந்திபதூபங்கனிவாகத் தான்கொடுத்து
சோடசமுஞ்செய்துபண்டுமுன்னே நோயாளிதனக்குமப்பா பா
ங்காகக்கலச நீர்சிரசில்வார்த்துகொண்டு வல்லோஅவழ்தங்கள்
கொடுக்கச்செய்நீகுற்றமெலாந்தான்தீர்ந்துவியாதிபோகும்தொ
ண்டுசெய்வாரனைவோருஞ்சமர்த்தனென்று தொல்லுலகில்செல்
வமதாய்வாழ்வார்தானே. (௮௩௧)

கும்பம்-கலசங்

கழிப்புச்செய்யும்விதம்.

தானென்றகழிப்புக்குச்சொல்லக்கேளு,தயவாகபச்சைமாப்
பாவைச்செய்துவானென்றயுதுமுறத்துக்குள்ளே வைத்து வள
மாக ஆபரணந்தன்னைப்போட்டுகோனென்ற முப்பத்திரண்டு தீ
பங்குறையாமல் நவரத்திநஞ்சொர்னம்வைத்துவானென்ற வஸ்
திரங்கள்பரிமளங்கள்சாத்திமைந்தனே சுகந்தபுஷ்பம்வாடைதூ
வே. (௩ ௮௨)

இரத்தசாமுண்டி சக்கரம்.

தூவடாரத்தசாமுண்டிசக்கரந்துலங்கவேயூவை முன்னே
எண்கேணம்போட்டுமாவடாதாணெடுத்துரேகைப்போட்டு மை

ந்தனே-எட்டறையில்கரியே தூவுநாவடாநாயிறைலனுட்கோணத்
தில்நலமானதிருச்சூரணந்தன்னை தூவு-வாவடாஉச்சரதும்மஞ்ச
ள்தூவவளமான முக்கோணம்பச்சையாமே. (௩௮௧)

ஆமேதான்முக்கோணம்ஸ்ரீங்காரம்போட்டு- அடவானநால
றையில்அம்-ஓம்-தும்மென்று-தாமேதான்நாலறையின்ஓங்காரங்க
ட்டிதலைசுழித்துசூலமிட்டுதயவாக-வாமேதான் கருப்புவண்ணஅ
றைகளெட்டுவளமாக-அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-என்ன-போமேதா
ன்யெட்டுமுனைசூலம்போடு பொங்கமுடன்களபமுதல் சுகந்தஞ்
சாத்தே. (௪௮௪)

சாத்தப்பாஎட்டுமுனைச் சக்கரத்தில்மூன்று, சார்வானபழந்
தேங்காய்தாம்பூலங்கள்-மாத்தப்பா பலகாரவகையுமன்னம் வஸ்
துசுத்திகடலைபொரியண்டத்தோடு-போத்தப்பா இளநீர்தேன்பா
ன்க்கம்பால்பொங்கமுடன்மஞ்சள்நீர்கரிதண்ணீரு, ஏத்தப்பாகட
லைமொச்சைபயறுசுண்டல் இதமாகவெண்ணெயுஞ்சர்க்கரையும்
வையே (௩௮௫)

வையப்பாபச்சைமாவிளக்கினோடுவளமாகஇத்தனையும்முன்
னேவைத்து, கையப்பாபுதுப்பானைவாயைத்தட்டிகனிவான சுண்
ணம்பைமேலேபூசி, பையப்பாகரிபொட்டுமேலேகுத்தி பாங்காக
புழுங்கரிசிசோற்றைபோட்டு, மையப்பாஉழுந்தென்றபருப்புங்கூ
டமைந்தனேகத்திரிக்காய்கருவாடாமே (௩௮௬)

ஆமேநீமுருங்கக்காய்மொச்சைச்சாறுஅடவானபுண்ணாக்கு
க்கீரையோடு, வாமேநீவஸ்துவுடன்சுத்திகூடவளமான।।ஞ்சவண்
ணச்சோறும்வைத்து, தர்மேநீபழந்தேங்காய்தாம்பூலஞ்சுற்றி த
யவாகஓட்டிவிட்டுபாவைமுன்புபோமோநீயெட்டிமாவிலிங்கம்ர
ண்டும்பொங்கமுட*நிம்பஎண்ணெய்நெய்மூளகாயாமே. (௩௮௭)

* நிம்பஎண்ணெய்-வேப்பெண்ணெய்.

ஆமப்பாசொர்னபுஷ்பமவர்க்குவைத்து அடவான தீபமொ
டுதூபங்காட்டி, தாமப்பாசோடசோபசாரஞ்செய்து தயவான
நைவேத்தியமானபின்புவாமப்பாபாவையைத்தான் தலைசுற்
றி, வளமாகஓட்டையுந்தான்தலையைச்சுற்றி, போமப்பாகாடுதனி
ல்மயானந்தன்னில்பொங்கமுடன்முப்பலியுங்கொடுத்துவையே.)

வைத்தவுடன்பில்லிசூனியங்கள்யேவல்வலுவானபேய்பூதங்
கறுப்புமாடன் இந்தமுடன்முனிவீரன்இருள்காட்டேரிஇதமான
ம

மனுக்குபனேசின்னபிரும், பத்தவுடன்பிரமராட்சதையும்பேயும்
பாங்கானசாத்தனெடுமொட்டான்பின்னும் கத்தவுடனிருதலைபி
ன்கொள்ளியோடுகருமுறையுந்தேவதைகளோடிப்போமே ()

### சிதம்பரமெழுதிக்கட்ட

போமேநீசிதம்பரத்தையெழுதிக்கட்டப் போகுமடாநோய்
பிணியும்பஞ்சபாவம் ஆமேநீபிராமணர்க்கு அன்னம்போடு அபி
ஷேகம்சங்கராக்குநீயம்ஏற்று தாமேநீமயேஸ்பரற்கு பூசைசெய்
நீதயவுடனேநந்திக்குசலத்தைவாருவாமேநீ அரசுடனே வேம்பு
சுற்றிவயிரவர்க்குவடமாலைச்சாத்தநன்றே. (௫௯௰)

### பில்லிவஞ்சனைநோயுந்தீர்ப்பதற்கு

### கிரியை

நன்றானபில்லிவஞ்சனையும் நோயும்நாயகனே தீர்ப்பதற்கு
சொல்லக்கேளு குன்றுதமாவிலிங்கங்குப்பைமேனி குணமாகமு
டக்கற்றான் இதுதான்மூன்றுபண்டாகவகைவகைக்கு பலம்பத்தா
கபாண்டத்திலதனைவிட்டு தூணிநீரில் துண்டாகவேகவைத்துவிர
ல்பொறுக்கதும்பைமலர்மேலிடவேபிணிகள்போமே (௫௯௧)

### வேறு தண்ணீர்

போமேநீபூவரசுஆலின்பட்டைபொங்கமுடன் கடப்பன்பட்
டைமூன்றுமாக ஆமேநீவகைவகைக்குபத்து அடவாகதூணிநீர்த
ண்ணீர்காய்ச்சி தாமேநீமேலிடவேபிணிநோய்தீருந்தயவானபில்
லிவஞ்சனையுந்தீரும்போமேநீ அறுக்கம்புல்சம்புகோரைபுகழ்பெ
றவேமுன்போலேபிணிகள்போமே (௫௯௨)

### ஏவல்தீர்க்க.

போமடாகண்டங்கத்திரியின்மூலம்பொங்கமுடன்காட்டுச்சீ
ரகத்தின்மூலம்வாமடாபிமராட்சதையின்மூலம் வகைவகைக்குப
லம்நாறுநிறுத்திக்கொண்டுதாமடாவெவ்வேறு பாண்டத்திட்டுத
யவானதூணிநீர்தன்னைவார்த்து நாமடாவெந்திறக்கிதின மொன்
றுநலமாகத்தான்வார்க்கஏவல்போமே. (௫௯௩)

### இரத்தசாமுண்டிமந்திரம்

போமப்பாரத்தசாமுண்டிமந்திரம் பொங்கமுடன் முன்னாக
சொல்லவில்லை ஆமப்பா ஓம்ரீயும்ரத்தசாமுண்டி துருதுருமடிம
டிசித்திருருகுருசுவகாவென்று அடவாகசக் கரத்திலாயிரந்தா
னேது நாமப்பாபில்லிவஞ்சனையும்நோயும்நலமானதேவரோடுக
ணங்கள்பூதம் வாமப்பாபஞ்சபாதகங்கள்யாவும் வலுவானராட்ச
தையும்விலகுந்தானே. (௫௯௪)

ஆடாதேபேய்-ஆட.

தானென்றபேய்மிரட்டியிலையின்தூளுந் தலைப்பிள்ளைக்கொடிதூளுஞ்சமனாய்ச்சேர்த்துபாணென்றஇவையுடன்சாம் பிராணிசேர்த்துபாங்காகபுகைபோடபசாசுஆடும்கோனென்றஓ,வாவென்றுவோதகொற்றவனே பூதமெல்லா மாடும்பாரு தேனென்றபோகருடகடாக்ஷத்தாலேதெளிவாகப்புலிப்பாணிபாடினேனே,

கண்கள்பில்லிவஞ்சனைபோகதீபம்

பாடினேன்மேனிடுவெர் - முட்டையோடுபொங்கானகழுதையுடதண்டுங்கூட்டி நாடினேன்கருச்சூலைதனில் சுருட்டிநறகழுதைநெய்யாதல் வேப்பெண்ணெயாதல், கூடினேன்சிரசோடுகிளிஞ்சியாதல்குணமாகதீபமிட்டுபார்க்கும்போது வோடினேனென்றுசொல்லிக்கணங்கள்யாவும்உத்தமனேபில்லிவஞ்சனையும்போமே

முட்டை-எருமுட்டைபிநாறி.

பயித்தியத்திற்கு.

போமடாகோசலமும்பசுவின்பாலும்பொங்கமுடன்கரிப்பான்சாறுமுசுமுசுக்கை தாமடாவகைவகைக்குபடிதானொன்று தயவான எள்ளெண்ணெய்படிதானொன்று ஆமடாகடுகுபதந்தன்னிற்காய்ச்சி அடவாகமூழ்கிவரபிரமைபித்தம்சாமடா பயித்தியஞ்செய்வினையுந்தீருஞ் சற்குருவாம்போகருடகடாக்ஷந்தானே. ()

சகலபேய்க்குங்குளிசம்

தானப்பாபிரமராட்சதையின் பூடுதயவாகவெள்ளியினால்காப்புக்கட்டிவானப்பாபஞ்சவர் நூலினாலே வளமாகத்தான்கட்டிகோசலத்தைவாருமானப்பாஎட்டுநாளந்தி மைந்தனேவார்க்கையிலேதியானமோது, ஆனப்பாஅரிபிரமராட்சதைநீயென்றுஆனந்தவல்லியென்று நூற்றெட்டோதே,- (௫௯௮)

ஓதடாமுப்பலியும்பொங்கலிட்டுஉத்தமனேநடுச் சாமந்தன்னில்தானும், வாதடாநிருவாணரூபங்கொண்டு வண்மையுடன்ஆணிவே ரறுமல்நீயும்ஆதடாயெடுத்துவந்துகுளிசங்கட்ட அடவானபிரமராட்சதையுமேவல்நாதடாமுனிகருப்புபேயும்பூதம் நலமானதேவனொடுஓடிப்போமே. (௫௯௯)

பேய்பூதம் ஓடிப்போகமை

போமடாஇன்னமொருமையைக்கேளுபொங்கமுடன்பன்றி

யுட் மூஞ்சியொன்று ஆமடாநாய்ப்பல்லுபுலியுண்ணுக்கு அடர்களு
தைமண்டைகரும்பூனையீரல்வாமடாமனுஷர்மலந்தட்டுச்சீலே வ
ளமாகநெருக்கியுப்பாபாண்டத்திட்டு தாமடாகுழித்தயிலமாவா
ரைகாஷ்டத்தாலெரித்துக்குப்பிலஅடைத்துக்கொள்ளே, (௬௱)

காஷ்டம்விறகு

கொள்ளப்பாமயானத்தில்பாழ்வீடாதல்கோரிவிடு குட்டிச்
சுவர் தன்னிலாதல்வள்ளப்பாவஸ்துடனேநெற்பொரியும் வைத்
துவளமில்லாஎருக்கம்பூஅரும்பினாலே மெள்ளப்பாநூற்றெட்டு
வுருதானேதூமென்மையாய்அக்காளேதியானித்துநீ அள்ளப்பா-
தூம்-தூம்-தூசி-தூசி-சீ-சீ-போ-போ-வென்று அடைவாகதயில
த்தினருமைபாரே, (௬௱௧)

பாரேநீதீலர்தமிடப்பில்லிவஞ்சனைப்பறக்குமடாதேவரோ
டுகணங்கள்பூதம்நேரேநீமுனிகழுப்புபேய்பசாசு நேரில்லாசெய்
வினையும்பாசித்தியந்திரும்சீரேநீநெரிகட்டால்வாசல்மேலேசெய
லாகப்பொட்டிடசொற்பனங்கள்கோடிவேரேநீவெடியுடுக்கில்த
டவினுக்கால்வீரானகுறிமுகந்தான்சொல்லநன்றே, (௬௱௨)

சொல்லான வெடிப்பிருந்த பொட்டினாலே சொற்பெரிய
சொற்பனங்கள்தீரவேண்டில் அல்லானப்பெட்டைமிகச்சுரண்டி
யப்பா அடவாகமுறந்தனிலேசிந்தாமல்தான் வல்லானசாணியி
ட்டுமெழுகி நன்றாய்வளமாகப் பசுவின்பால்கொண்டுதேய்நீசொ
ல்லான வல்லாங்கால் புடர்கிலத்தில் சூரையாய்க் கொட்டிவிடு
சொற்பனங்கள்போமே, (௬௱௩)

அக்கினி பளாஸ்திரி

போமென்று அக்கினிபளாஸ்திரியைக்கேளு பொங்கமுடன்
மெழுகதுவும்விராகன்பத்து ஆமென்றுபாண்டத்திலிட்டுமைந்தா
அடவாகவீரமைந்துபொடித்துப்போடுதாமென்றுவுருகையிலே
விளக்கெண்ணெய்விட்டுதானுருக்கிவடிகட்டிசலத்தில்வாரு வா
மென்றுதனையெடுத்து சிமிழில்வைத்துவளமாகச்சல்லாமேல் த
டவிவையே, (௬௱௪)

தடவியேகைகால்குத்தெடுக்குந்தேகந் தயவாகஎலுமிச்சம்
பழச்சார்பூசிஅடவியேசாரத்தைப்பொடித்துத்தூவி அடவான
பிளாஸ்திரியை அளவாய்ப்போட்டு மடவியேகட்டிடவேபொறு
க்கொண்ணுதுமயக்கமுஞ்சோபங்கண்டாலவிழ்த்துப்போடு கட
வியேகொப்புளித்து சலமதாகுங்கத்திரித்துவிட்டுவிடு நீருபோ
மே, (௬௱௫)

### இரணமாறுகிறபிளாஸ்திரி

போமேநீவலிக்குத்துத் தீர்ந்துபோகும்பொங்கமுடன் ரணமாரப்பிளாஸ்திரிசொல்வேன்-ஆமேநீவெள்ளையென்ற குங்கிலியந்தன்னை அடவானமெழுகுடனே சமனாய்ச்சேர்த்து வாமேநீபாண்டத்திலுருகும்போதுவளமான தேங்காயின் நெய்யைவார்த்து நாமேநீயுருக்கிவடிகட்டிநீரில்கலமாகத்தான் வார்த்துயெடுத்துக் கொள்ளே. (௪௱௬)

கொள்ளப்பாசிமிழ்வைத்துப் பதனமாகக்கொற்றவனே சல்லாவஸ்திரத்தில்பூசி அள்ளப்பா அனல்தனிலேகட்டிகட்ட அடவில்லாரணங்களெல்லாமாறிப்போகுமெள்ளப்பாசிரங்குபுண்ணில்பிளாஸ்திரிப்போடமேன்மையாயொடுங்கியது உதிர்ந்துபோகும்தெள்ளப்பாபோகருடகடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணிபாடினேனே. (௪௱௭)

### பளாஸ்திரி

பாடுகிறேனின்னமொரு பிளாஸ்திரிகேளு பாங்கானவிளாம்பிசினுங்கருங்குங்கிலியம் - நாடுகிறேன்சமன்கொண்டு வுருகும்போதுநலமானவிளக்கெண்ணெய்கூடவிட்டு ஆடுகிறேன் வடிக்கட்டிக்கலசந்தன்னில் அடவாகத்தானடைத்துத்துணியில்பூசி-சூடுகிறேன்ரணங்கள்மேல்போடஆறும்வகமாகஅனல்காட்டிப்போட்டிடராயே (௫௱௮,

போட்டிடவேஇன்னமொரு பிளாஸ்திரிசொல்வேன் புகழ்பெரிய*மரத்துவெள்ளைப்பலந்தானைந்துகூட்டிடுவாய்பூரம்விடைவிராகனைந்து கூட்டியேதானரைத்துபொடியாகச்செய்துமாட்டிடுவாய்தென்னங்காயெண்ணெயாலே மைந்தனேதானரைத்துத்தண்ணீர்விட்டு அட்டிடுவாய்த்தவளம்போலாகுமட்டும் அப்பனே புண்மேலேபோடப்போமே. (௪௱௯)

மரத்துவெள்ளை-வெள்ளைகுங்கிலியம்.

தவளம்-வெள்ளை

### மேகராசாங்கத்தெண்ணெய்

போமென்றமேராசாங்கத்தெண்ணெய்ப்பூட்டுகிறேனன்றுகபுகலக்கேளு-ஏமென்றஏரண்டத்தெண்ணெய்யடிநாலுவிதமாஈருள்ளிச்சாறுபடியிரண்டு ஆமென்றகழுதைலத்திச்சாறுபடிரண்டு அடவாகவரிக்கும்மட்டிச்சாறுபடிரண்டு வாமென்றகையான்புளியாரைசங்குவல்லாரைப்பிரமியொடுதலைசெருப்படியே ( )

ஏரண்டத்தெண்ணெய்-ஆமணக்கெண்ணெய்

ஈருள்ளி-வெங்காயம்

படியானகருநொச்சிப்பொன்னாங்காணிபாரிதுணை ஆதொண் டைக்கிரந்திபூண்டு செடியானவெள்ளறுகு சிவனார்வேம்புசெய ஞானவகைக்குவகைப்படிதான்ரண்டுகெடி.யானசாரெல்லாமெட் டொன்றாக்கிகெணிதமாய்வேருவகைசொல்லக்கேளு பிடியான கொடிவேலி பூவரசன்வேரும்பொங்குநிலவாகை சுடுதுரத்தம் வேரே. (௪௱௰௧)

கிரந்திபூண்டு-கிரந்திநாயகம்

சுடுதுரத்தம்-சித்திரமாலை

வேரானகிளிமூக்கின்கிழங்கிேனாடு விதமானஅப்பைவிட கி ழங்குங்குப்பி, சீரானவகைவகைக்குப்பலமதாகச்சேர்த்திடித்து ங்குறுணிநீரெடடொன்றாக்கி,காரானஎண்ணெயிலேவிட்டுமைந் தாகடைசரகருஇநிற்போடகருத்தாய்க்கேளு பேரானசாதிக்கா ய்க்கிராம்புஏலம்பேதமில்லாசிறுலவங்கப்பட்டைமிளகே. ()

கிளிமுக்குக்கிழங்கு-கற்றாழைக்கிழங்கு

மிளகுடனேஅதிமதுரங்கோஷ்டந்திப்பிலிமிதமான திப்பிலி யின்மூலத்தோடு அளகானவெண்காரம்குராசாணியோமம் அட வானதான்றிக்காய்கடுக்காய்காயம் - வளமானகாரிய சீரகங்கார் போகங்கஸ்தூரிஅரத்தைசுக்குஅதிவிடயமக்கிராகாரம் பளகான கடுகுரோணியுமாஞ்சில் பொங்கமுடன்தாளிசபத்திரியுமாமே()

ஆமென்றகசகசாஓமங்கஞ்சா அடவானவலம்புரிக்காய் பர ங்கிப்பட்டைவாமென்றசெனுமரப்பட்டையோடு வளமானவாலு ழுவைசிறுநாகப்பூஊழென்றதக்கோலம்வசம்புசுக்கு உத்தமனே யபினிவசுவாசிசீரம்போமென்றயானைத்திப்பிலி குங்குமப்பூபொ ங்கமுடன்வாளஞ்சேங்கொட்டைத்தானே (௪௧௪)

சேனுமரப்பட்டை-அழிஞ்சிப்பட்டை.

தானென்றஎவாச்சாரஞ்சத்திசாரந் தயவான நவாச்சாரஞ் சாஸ்திரபேதிஆனென்றவகைவகைக்கு விராகனுலு அடவாகப் பொடித்துநீஎண்ணெய்தனிற்போட்டு வானென்றமெழுகுபதந்த னிலிறக்கிவண்மைபெறகண பதியைப்பூசைசெய்து தேனென்ற குருபதத்தைமனதிலுன்னி தென்புபெறஒருகரண்டியுள்ளேகொ ள்ளே. (௪௰௫)

கொள்ளப்பாஅந்திசந்தி கொண்டபோது கொடிதானயத்தி யந்தானெதுவுமாகாதெள்ளப்பா மூன்றுநாளாறுவேளைதெளிவா ஏழாநாள்நீரைவாரு- மெள்ளப்பாவறுத்தவுப்பும் பருப்பமாகும் மேன்மையாம்மற்றுநாள்புளியைக்கூட்டு-சுள்ளப்பா கிரந்தியரை யாப்புச்சூலைசுகமில்லாவிப்புருதிகண்டமாலைப்போமே (௪௰௬)

போமேநீயிருபத்தோர்மேகமுந்தானும்பொங்குகின்ற குஷ் டமொடுசோகைப்பாண்டுதாமேதான்கழல்வாதம் அண்டவாதந்

தியவில்லாகால்வாதம்பச்சைவாதம்ஆமேதான் பவுத்திரமூமூலப்புற்று அடவானமண்டைசூலைவாயுதிருமே நீரணங்களோடுசூலைதிரும்திறமானயோகருடகடாட்சந்தானே (௪௧௭)

ஐந்தெண்ணெய்த்தயிலம்

தானுனஎள்ளெண்ணெயே ரண்டதெண்ணெதயவானஇலுப்பெண்ணெவேப்பெண்ணெதான் மானுனபுங்கெண்ணெயைந்துந்தானுமைந்தனேவகைவகைக்குப்படிதானென்று தானுனப்பாண்டத்திலளந்துவிட்டுதயவாகக்கியாழும்வகைச்சொல்லக்கேளு கோனுனஆதொண்டைமூலம்பத்ரி கொற்றவனேசெம்புடையமூலங்கேளே (௪௧௮)

கேளேநீதழுதாழை காட்டாமணக்கு கெணிதமாய்த்திருகுகள்ளிவேளைமேனிநாளேநீமாவலிங்கம்ஆ லிநொச்சிநலமாஞ்வேம்புபுங்குவெள்ளைநொச்சிசூளேதான்கொடிவேலிகார் முருங்கைச்சங்குசுகமாகஊர்முருங்கைதூதுவேளைவாளேநீமாம்பட்டை.மூலிகைதான்மூலம்வகைவகைக்குப்பலமைந்துநிறுத்திக்கொள்ளே

கொள்ளப்பாஇவையெல்லாமிடித்துப்போட்டு குணமாகதூணிநீர்எட்டொன்றாக்கி தொள்ளப்பாஎண்ணெயிலேயிருந்துவாருதெளிவாகசரக்குவகை சொல்லக்கேளு-மெள்ளப்பாஅரத்தைசுக்குவோமந்திப்பிலிமேன்மையாகத்திப்பிலியின் மூலத்தோடுஅள்ளப்பா ஆனைதிப்பிலியுங்காயம் அடவாககருஞ் சீரகஞ்சதகுப்பைதானே (௪௨௰)

தானென்றதேசாவரங்கு ராசாணியுள்ளி தயவாகவெளிச்சியென்றபிசினியோடுவாளென்ற வசம்புடனேதேக்குஇஞ்சிமைந்தனேசடாமஞ்சில்கிராம்புகுக்கின்தேனென்றவகைவகைக்குபலங்காலாகதெளிவாக அரைத்திட்டுஎண்ணெயிலேபோட்டுகானென்றமெழுகுபதந்தன்னில்காய்ச்சி கணபதிக்குபூசைசெய்துயெடுத்துக்கொள்ளே (௪௨௧)

உள்ளி-வெள்ளைப்பூண்டு
வெளிச்சி-விளாம்பிசினி
குக்கில்-மய்சாட்சி

கொள்ளப்பாதயிலங்காசி டைதானுண்டுகுணமாகமேலெங்கும்பூசிறைக்கால்கள்ளப்பாசன்னியெங்கே தோஷமெங்கேகடிதானவலிப்பேழும்அண்டவாதம் சுள்ளப்பாவாதமென்றவகைகளெல்லாஞ்சுழன்றெழுந்துஓடிவிடுமெதிர்நில்லாது மெள்ளப்பாமூன்றுநாளாறுவேளைமேன்மையாயேழுநாள்நீரைவாரோ (௪௨௨)

விஷமுட்டித்தயிலம்

வாரோதான்விஷமுட்டிதைலமொன்றுவளமாகச்சொல்லுகிறேனென்றுய்க்கேளுசேரோதான்யேரழிஞ்சியெட்டிச்சங்குசெயலா

னவன்னிபுங்குவண்டுசொல்லி சாரேதான்சங்கங்குப்பிகடம்புசி
ன்னிசார்வானமெள்ளஞருஆவிப்பட்டைதீரேதான் மருக்காரை
இரண்டுக்கொத்தான்நிறஞ்சொன்ணுயுருவிகாஞ்சோரியாமே ()

வண்டுகொல்லி-செண்பகம்

ஆமேதான் குன்றுமணி கருகருத்தகண்ணி ஆவாரைசிவன்
வேம்புகழுதைமுள்ளி,தாமேதான்மறுதோன்றிபுரசிகருங்காலித
யவானபுடர்த்தியொடுகிஞருவைவாகை யோமேதான்புனலிண்டுக
ருவூமத்தைபொங்கமுடன் கொடுவேலி முத்தக்காசுவாமேதாம்
அமுக்கராவிடத்தேறும்பூவரிசுடனே சின்னப்பாலாக்குமரித்தா
னே (சஉச)

மறுதோன்றி-ஐவன்னி

சின்னபாலாகுட்டிபாலாகுமரிசோற்றுக்கற்றாழை

தாஞனமிளகணைக்கொன்றையாத்தி தயவானகழல்கொடியு
ஞ்செங்கத்தாரிவாஞனபெருமரமும்அவிரிகட்டுவளமாகசமனறு
கதியுலர்த்திக் கொண்டுபாஞனக் குழித்தயிலமாகவாங்கிபக்குவ
மாய்த்தானெடுத்துப்பதம் பண்ணுமாஞனசீறிசெந்துவகையைச்
சொல்லேன்மைந்தனேமூஞ்சுறுகருங்காகமாமே (சஉரு)

பெருமம்தலைசுருளிகட்டுகட்டுகொடி

ஆமேதான்யமுங்கோடுகமுகு ஆமையாங்கைஅடவுயச்சோங்
தியுங்கூகைதேவாங்குதாமே தான்பசுந் தவளைப்பெருவிரியின்த
யவானமனுஷமண்டைகழுதைமண்டை போமேதான்மேதிக்கொ
ம்புபரிக்குளம்பிஞேடுபொலியானைலத்தி முதல்யுமுக்கைதானும்
வாமேதானபொட்டகத்தின் லத்திக்கூடவன்பன்றிக்கழுதைபுட
லத்திதானே (சஉசா)

பச்சோந்தி-பச்சைஓணன்

மேதிக்கொம்பு-எருமைக்கொம்பு

கூகை-கோட்டான்-பரிக்கொம்புகுதிரைகுளம்பு

தானப்பா வெள்ளாட்டுப்புழுக்கை கயோடுதயலகசமன்கொ
ண்டுஇடித்துலர்த்தி பானப்பாகுழித்தயிலமாக வாங்கிபாங்கான
இருதயிலஞ் சமனுய்ச்சேர்த்து ானப்பா கொட்டைத்தயிலம
ைப்படிகொற்றவனே தயிலத்தின்கூடவா ருவானப் பாகருப்பு
டையகுங்கிலியம்வளர்த்திகையின்பூட்டையபூசித்தானேசஉஎ

பூட்டு-சூட்சம்

தானடாகருஞ்சீரகம்கஸ்தூரிமஞ்சள் தனித்தேதான்மாசக்
சாயிரசகற்பூரம்மானடா செஞமரப்பட்டையோடு மைந்தனேவ
கைவகைக்குப்பலந்தாஞென்று வானடாபரங்கிப்பட்டைபிறப்
ன்கிழங்குவளமாகப்பலம்ரண்டு நிறுத்திப்போட்டுபானடாவலம்
புரிக்காய்கடுக்காயோடுபாங்காகப்பலமொன்று நிறுத்துக்கொள்
ளே. (சஉஅ)

கொள்ளேதான்ஒதியம்பட்டை * கொடியின்சாறு குணமாக சரக்கெல்லாமறைத்துப்பேரடு - அள்ளேதான்மயிலெண்ணெய் வேப்பெண்ணெய்யிரண்டும் அடவானதயிலத்தில்நேரேசேர்த்து துள்ளேநீதுளாவிமிகப்பதத்தில்காய்ச்சி சுகமானகணபதிக்கு பூசைபண்ணு-தெள்ளேதான் துவளையிடுதேகமெங்கும் தெளிவாக நோய்தீரும்விபரம்பாரே. (சஉகூ)

* கொடி-சித்திரமூலம்

பாரேதான்கால்முடங்கைமுடமுந்தீரும்பாங்கானசூலையொடுகுஷ்டநோயும்-சேரேதான்புடையன்செவ்வட்டை மரவட்டை செய்யானவண்டுகடியில்லிவஞ்சினையும் - தீரேதான்பூதமுதல்பசாசுவேதாளந்திரமானபிரம ராக்ஷதையுங்கூட வீரேதான்மற்றுநாள்வேறுதண்ணீர்வீரானநோயறிந்துதண்ணீர்வாரே. (சஙய)

வாரடாகைப்போடு புளிபுகையுந்தள்ளுவளமானவுப்பை நன்றாய்வறுத்துக்கூட்டு-பாரடாபாசிபயர்கொடிக்காலின்பிஞ்சுபாங்காகமுருங்கைபுடப்பிஞ்சுமாகும்-கூரடாஆவின்பால்நெய்யுமாகுங்குணமானதுவரையுடபருப்புமாகுஞ் சீராடாவியர்தியுட குழியுங்கண்டுசிறப்பாகபத்தியத்தைசீராய்க்கூட்டே. (சஙக)

விஷங்களுக்குமெழுகு

கூட்டப்பாவரிக்குமட்டிபழச்சார்வாங்கிகுணமாகபபாண்டத்தில்மைபோல்கிண்டி - மாட்டப்பாகிமிழ்தனிலே யடைத்துக்கொண்டுமைந்தனேபசும்பயறுனளவாய்த்தானும்- மீட்டப்பாநாவுதனில்தடவிப்போடு மிகுந்ததொருவிஷங்களெல்லா மிறங்கிப்போகும் ஆட்டப்பாபோகருடகடாக்ஷத்தாலே அடவாகப்புலிப்பாணிபாடித்தானே. (சஙஉ)

அக்கினிமந்தத்திற்குலேகியம்

தானேதான்திரிகடுகு ஓமம்வாய்விளங்கந் தயவாகவகைவகைக்குவிராகனைந்து- போனென்றபொடிப்பண்ணி சர்க்கரைநோச்சேர்த்துபொங்கியதேன்படிக்கால்வார்த்து-கோனென்றுபிசைந்ததிலேவைத்துக்கொண்டு குணமாகநெல்லிக்காயளவுகொள்ளவானென்றவாயுஅக்கினியின்மந்தம்வாங்குமடாபோகருட கடாட்சந்தானே. (சஙங)

சத்தவல்லாதிஎண்ணெய்

தானப்பாசத்தவல்லாதியெண்ணெ தயவாகசித்தாமுட்டி மூலத்தோடு-ஆனப்பாபலமதுமுப்பத்திரண்டு அடவாகத்தானிடித்துஇருதூணிநீரில் பானப்பாநாலிலொன்றுகாய்ச்சிவாங்கி பாங்காகஐந்தெண்ணெய்யொருபடிதான்வாரு - வானப்பாகெந்தியதிமதுரங்கோஷ்டம்வளமாகசாதிக்காய்சாதிபத்திரியே. (சஙச)

பத்தானஏலமுடலவங்கப்பட்டை பாங்கானஅரத்தைசுக்கு அக்கிராகாரம்-முத்தானமாஞ்சில்தாளிசையாம்பத்திரி முடிக்கானவாய்விளங்கம்யானைத்திப்பிலிசித்தானதிப்பிலி கடுகுரோகணியுந்திருக்கைநீர்வாலின்மிளகுஓமம்வித்தானகுங்குமப்பூகருப்புசீரகம்விதமானகடுக்காயுந்தான்றிக்காயே (௪௱௫)

காயானசெண்பகப்பூகொத்தமல்லி கருவானவாலுமூவை சிறுநாகப்பூ- மாயானசெவியமதுகழஞ்சிநாலுமைந்தனே பொடிப்பண்ணியெண்ணெயிலேபோட்டு- தாயானபழச்சாறுயசுவின்பாலுதயவாகவகைவகைக்குப் படிதான்வாறுசேயானமெழுகுபதந்தனில்வடித்துசெயமானபுழுகுடனேகஸ்தூரிப்போடே (௪௱௬)

போடேதான்வகைவகைக் கழஞ்சித்தானும் பொங்கமுடன் கணபதிக்குப்பூசைபண்ணு- நாடேதான்காசிடைதான் எண்ணெய்கொள்ளநாசியிலேயொருதுளிமேலேபூச - சாடேதான்மண்டைவாதம் சடிதானபித்தமொடுநீலகாசம் சூடேதான் பீநசமும் வாயுசூலைசுகமில்லாய்ச்சொரிமுதலாய்த்தீரும்பாரே (௪௱௭)

பாரேநீமூன்று நாளீறுவேளைபாங்காகக்கொள்ளையிலேபத்தியத்தைக்கேளு-சேரேதான்சீயக்காய் வெந்நீர்வாரு சிறப்பான பசும்பயறுஉப்புங்கூட்டு-தீரேதான்நாலாநாளெல்லாங்கூட்டுதீர்க்கமாயிப்படிமூன்றுகெடுவேகொள்ளு - வீரோதான்சொன்னபிணிதீரும்பாருவிதமான போகருடகடாட்சந்தானே. (௪௱௮)

ஈளைகாசம்பெருமூத்திரத்திரச்சிநீரடைப்புக்கிரிச்சினம்.

பெரும்பாட்டுக்குலேகியம்.

தானனவரிக்குமட்டி வேர்பலமும்பத்துதயவான கடுக்காய் வேர்னெல்லிவேரும்-மானனதான்றிக்காய்வேரிறேடுமைந்தனே அத்திமல்லிகையின்வேரும் - கோனனவெட்டிவேர்வில்வவேருங்குணமானவிலாமிச்சைதூதுவளை*நாரி - வானனமாதளைதாங்கிசிறுகாஞ்சோரிவளமானநெய்தலொடுசெங்கழனீர்க்கிழங்கே ()

* அத்திமல்லிகை-பத்திராட்சி
* நாரி-நன்னாரி
* தாங்கி-மலைதாங்கி

கிழங்குகாசமல்லிநிலைப்பனையும்*வாகைகிருபையுடன் கண்டங்கத்திரியின்மூலம்- புளங்கமப்பாவகைவகைக்கு பலந்தானென்றுபோட்டிடித்துதூணிநீரெட்டொன்றுக்கிவிளங்கப்பா பசுவின்பால்படிநால்விட்டுவிதமானசரக்குவகைசொல்லக்கேளு - முளங்கப்பாசாதிக்காய்சாதிபத்திரி முயலான கிராம்பேலம்வாலுடையமிளகே. (௪௱௰)

* வாகை-நிலவாகை

மிளகானசிறுல்வங்கம்மந்திஷ்டிகோஷ்டமிகுந்த நல்லசந்தன
மும்கரியசீரம் அளகானசதகுப்பைவாய்விளங்கம் அடவானசா
ஸ்திரமாம்பேதியோடுபுளகானதாளிசபத்திரிதேவதாரம் புனித
சீரகமிளகுசிறுநாகப்பூ இளகானஅதிமதுரம்காஞ்சினியும் - ஏம
வாலுழுவைதேக்கு சிங்கியாமே, (௪௪௧)

காஞ்சினி-மஞ்சள்
சிங்கி-காடுக்காய்ப்பூ

ஆமேதான்கஸ்தூரிமஞ்சளோடு அடவானதிப்பிலியுந்திப்பி
லியின்மூலம்-போமேதான் ரோகணியும்நெருஞ்சில்முள்ளுபொ
ங்கமுடன்குரோசானிமுத்தக்காசு தாமேதான்கடுக்காயுங்நெல்லி
க்காயுந்தயவானகுங்குமப்பூமாதளையின்பிஞ்சு,வாமேதான்வகை
வகைக்கு கழஞ்சிநாலுவளமாகப்பசுவின்பாலில்தன்னுலாட்டே,()

ஆட்டியேகியாழமதுதன்னிற்போட்டு அடவாகஆவின்பால்
நெய்படிநால்விட்டு நாடியேசெவ்விள நீர்பழச்சாறுதானும், நல
மானவல்லாரைச்சாறுங்கூட, மூட்டியேவகைவகைக்குப படிதா
ன் ரண்டுமுசியாதசீனியதுபலந்தான்ரண்டுகூட்டிடுநல்லவெல்ல
ம்பலந்தானுலுகூடவிட்டுமெழுகுபதந்தன்னிற்காச்சே, (௪௪௩)

காச்சியேவடிகட்டிக்கலசத்திட்டு கணபதிக்குப்பூசைசெய்
து நெற்புடந்தான்திங்கள், ஆச்சியேயெடுத்துநீவைத்துக்கொண்
டுஅடவாக முக்கழஞ்சிஅந்திசந்தி, தாச்சியேகொண்டிடவே பி
ளைகாசந்தயவில்லா தலைநடுக்கம்பித்தமே மேகம்ஆச்சியேவலிப்
பொடுகல்லடைப்புஅளவில்லாமூத்திரத்தின்கிரிச்சியோடு,பேச்
சியேபெரும்பாடுமேலெரிவுகாந்தல்பேதமில்லாநீர்ச்சிறுப்பு வா
யுபோமே, (௪௪௪)

போமடாமலடிக்குப்பிள்ளையுண்டாம் பொங்கியகைப்புபுளி
தயிருமக்கா, வாமடாநெய்விட்டாலெல்லாமாகும்வளமானதேக,
மதுகாந்தி யுண்டாம்பாமடாபவளபற்பம்நெய்யிற்கூட்டி பாங்கா
கக்கொண்டிடவேநோய்களெல்லாம், தாடாகைகறுப்பு மாறிப்
போகும்தயவானபோகருட கடாட்சந்தானே. (௪௪௫)

பீநசத்துக்குஎண்ணெய்.

தானப்பாபீநசத்துக் கெண்ணெய்கேளு தயவாகஎள்ளெண்
ணெய்படிதான்ரண்டு, வானப்பாகரிசாலைபொன்னுங்காணி வள
மானவெற்றிலையவுரிமுசுக்கை, மானப்பாமூக்குரட்டை அத்திப்
பட்டைமைந்தனே வகைவகைக்குப்படிசார்விட்டு- கோனப்பா
ன்தொண்டையிலைச்சார்தானுங், கொற்றவனேபடியிரண்டளந்து
வாரே. (௪௪௬)

வாரப்பாபீநசமாய் பூண்டுமூலம்வகையுடனேஇடித்தச் சா
ர்படிதானென்றுவீரப்பாபசுவின்பாற்படிதானென்று வித்தகனே

யடுப்பேற்றிவேகும்போது சீரப்பாமிளகுடனேகஸ்தூரிமஞ்சள்
சிறுகடுக்காய்நெல்லிவிதநுபிம்பவித்துங்காரப்பாகருஞ்செம்மை
ப் பூவுந்தானுங் கனமானவகைவகைக்குப் பலந்தான்வாங்கே, ()

வாங்கியேபொடித்திட்டு முன்னெய்யிற்றூவி வகையுடனே
மெழுகுபதமானபோது, தூங்கியேபோகாதயிறங்கிக்கொண்டுதூ
ய்யமிகு கணபதியைப்பூசைசெய்துதிங்கில்லாதைதலமதைதினமு
நான்கில் தீவாரமாய்மூழ்கிவாதிரும்ரோகம்ஏங்கியேதிரியாதேபு
ளிப்புகைப்புஎள்ளெண்ணெய்மாங்கிழமூமீனுகாதே, (௪௪௮)

ஆகாது விடையங்களாகாதப்பா, அப்பனேவறுத்தஉப்புதூ
வளையாகும்-வேகாதபண்டங்களொன்றுமகாவெங்நீருமுருங்கை
க்காயவரைப்பிஞ்சும்நோகாதவமூதலங்காய்வற்றலாகும்நோயா
ளிகண்டறிந்து பத்தியஞ்செய்தாற்-போகாத பிநசங்கள்பறந்து
போதும் போகருடகடாட்சத்தாற்பாடினேனே, (௪௪௯)

விடையங்கள், பெண்போகம்

மேகரணங்களுக்குத் தீப்புகை.

பாடுவேன் மேகமென்றரோகந்தீரப்பாரிலுள்ள பண்டிதரே
பகரக்கேளு, நாடுவேன்பூரமதுவிராகனென்றுநலமானசூதசெந்
தூரமொன்றுகூடுவேன்தேன்மெழுகுபலமோாலுகுறியாககரண்
டியிலேஉருக்கிக்கொண்டுஆடுவேன்முன்சரக்கைபொடித்துத்தூ
வி அப்பனேஇறக்கியைந்துந்திரியிலூட்டே, (௪௫௰)

சூதசெந்தூரம்-ரசசெந்தூரம்.

ஊட்டியேரோகிதனை அரையில்வைத்துஉத்தமனேதிரியொ
ன்றைதீபமேற்றிநாடியேகண்சிரட்டைஎதிரில்வைத்துநலம்பெர
வேரோகியின்மேல்போர்வைவிட்டுதாட்டிகமாய்த்திரி யெரிந்து
அனையுமட்டுந்தானிருந்துவேர்வையெல்லாந்துடைத்துப்போட்
டு,ஆட்டியேஆவின்பால்உழக்குள்தந்துஅப்பனேபாலன்னம்பின்
னூற்கொள்ளே, (௪௫௧)

கண்சிரட்டை-கண்கொட்டாங்கச்சி

கொள்ளவேஉப்பாகாமூன்றுநாளும், குணமாகபாலன்னம்
கொள்ளவேண்டுந், தள்ளவேமற்றொன்று மாகாதப்பா, தண்மை
யுடன்நான்காநாள்வெந்நீரோடு, மெள்ளவேநீருமூள்ளி சமூலங்
கொண்டுமிதக்கவிட்டுகாய்ச்சியபின்னூாவிட்டு, அள்ளியேஓமமி
ட்டுநீரைவார்த்துஅப்பனே செம்மறியின்மிளகுநீரே, (௪௫௨)

செம்மறி-செம்மறியாடு

நீரிலேமிளகாகும்உப்புமாகும்-நிச்சயமாயன்று தொட்டுச்
காரசாரமாறியேநெய்யோடுபாலுமாகும்மைந்தனே ஆட்டிறைக்

சிமெச்சமாகும்-பாரினிலேபெண்ணுநாபுளியுமாகா, பாலகனேவாய்நீரை ஆற்றலாகா,வீரியமாயிருபத்தாநாலோ மந்தேய்ந்து விருப்பமுடன் விளக்கெண்ணெய்மூப்பதிலேமூழ்கே (௪௫௩)

மூப்பதுடன்பத்தாநாளாகுமுன்னே முக்கியமாய்திருகின்ற வியாதிகேளுதப்பதுடன்பிநசங்கனேழுந்திருந் தலைபிளவைஉச்சிபுற்றுகண்டமாலை கப்பதுடன்கன்ன புற்றுலிங்கப்புற்றுகனமான அண்டபுற்றுயோனிப்புற்றுஇப்பதுடன்பல்லாணைசந்தபுற்றுஇயலானமார்பிளவைகொருக்கையாமே ௪௫௪

போகுமேஅரையாப்புஆசனத்தின்புற்றுபொல்லாதபவுத்திரங்கள்மேகவடிசூலைசாகுமேகுஷ்டவெடிதுடைபில்வாழைசலக்கண்ணிஅழுக்கண்ணிசதைவளர்த்தல்-ஏகுமேதவளைசொறிஆனைசொறிபீலிஇயலில்லாரணங்கலெல்லாமெளிதில்போகும்ஆகுமே போகருடகடாட்சத்தாலேஅவனிதனிற்புலிப்பாணிஆடினேனே

அண்டமெழுகு

ஆடியேசித்தண்டமெழுகிதப்பா அப்பனேசொல்லுகிறேன் வில்வ*மூலம்தேடியேவிசைபத்து கொண்டுவந்துதேர்ந்தனைநறுக்கியபின்நிழலுலர்த்தி-வாடியேபோகாதபாண்டத்திலிட்டு வாய்மூடிசீலைசெய்துகுழித்தயிலம்வாங்கி- நீடியேதலைஅண்டம்பிங்காணிலிட்டுநிலைவரமாய்தைலமதைநிறையவாரோ. ௪௫௬

*மூலம்-வேர்

வார்த்தபின்புநாற்பதுநாள் ரவியில்வைத்துவற்றவற்றதைலமதைவார்த்து வந்தால்பார்த் திருந்தபண்டிதர்கள் மாயமாகபசுமையுள்ளமெழுகாகும்பசரக்கேளு தூர்த்துவந்தவாதமெல்லாந் துலைந்துபோகுஞ்சுண்டக்காயளவெடுத்துதேனிலீந்தால்- ஆர்த்திருந்தசூலையெல்லாமார்ந்துபோகுமளவாகப்புலிப்பாணிஅறைந்திட்டேனே. ௪௫௭

இலவணச்செந்தூரம்

அறையுரோன்லவணத்தின்செந்தூரங்கேள்அப்பனேகல்லுப்புபலந்தானுலு-சறையுரோன்ரூதமதுபலந்தானென்றுகல்வத்திலிதானிட்டுகூவிளத்தின்சாற்றால் மறையபவேதானரைதுரெண்டுசாமம்மார்க்கமாய்க்குகையில்வைத்து சொல்லக்கேளு- விரையுரேன்போகருடகடாட்சத்தாலே விபரமுடன்புலிப்பாணி விளம்பக்கேளே ௪௫௮

*இலவணம்-உப்பு-கூவிளம்-வில்வம்

கேளேதான்உலையில்வைத்து பழுக்கஊதகிருபையுடனுருகியதுமணிபோலாகும்கேளேதான் வாராமல்ஆறவிட்டு கொற்றவனேகல்வமிட்டு பொடியாய்ச்செய்து- நாளேதான்அந்திரத்தாமரையின்சற்றால்நால்சாமந்தானரைத்து பில்லைதட்டிபாளேதான் போகாமல்காயவைத்துபக்குவமாய்ச்சில்லிட்டுபுடமுழமுமாமே

ஆமேநீமுன்போகில்ஐந்துபுடம்போட்டால் அப்பனேசெந்தூமாகும்பாரு-தாமேநீயெடுத்ததனை சிமிழில்வைத்து தயவாக

பணவிடைதான்தேனிற்கொள்ளபேமேநீ குன்மமென்றதெட்டுந் தீரும்பொல்லாதநெஞ்செரிவுசூலைரோகம்-வாமேநீசூதத்தின்வா யுதீரும்வல்லமையால்புலிப்பாணிவகுத்திட்டேனே ௪௱௰

நமாச-மெழுகு

வகுத்திடவே* நமாசமெழுகு தன்னைவளமாகச்சொல்லுகி றேன்மைந்தாகேளு-தொகுத்திடுவேன்லிங்கமொதரளகமுஞ்சிங் கிசொற்பெரியமனோசிலையுங்கௌரிவெள்ளை-பகுத்திடுவேன்சூத ங்கெந்திவீரம்பூரம்பாங்கானதுருசியுடன்வகைக்குத்தானு -மகத் திடுவாய்விராகனிடையொன்றே தானுமாசற்றவாளமதுபதினொ ன்றுமே. ௪௱௧

* நமன்-எமன்

ஆமேதான்சரக்கெல்லாங்கல்வத்திட்டுஅப்பனேஅன்னக்கா டியினாலாட்டிதாமேதான்நாற்சாமமானபின்புதயவாகமுழச்சீலை அதில்பரப்பிபோமேதான் திரிததனைகாயவைத்துபொங்கமுடன் ஆவினெய்பலமெட்டாகும்,திமேதானில்லையடா சுடர்தயிலமாக த்தீவரமாய்மூன்றுமுறைமடக்கிச்செய்யே ௪௱௨

செய்தபின்புதயிலமதை யெடுத்துக்கொன்டுசெப்பரியபனை வெல்லம்பலமுமூன்று-கொய்தசுக்குடனுமூன்தயிலங்கூடகொற் றவனேவிராகனிடைசேர்த்துவைத்துகைதவமாய்சுண்டக்காய்அ ளவுகொள்ளகடத்திலுள்ள வாதமெல்லாங்கதிகெட்டோடும்மை தமுடன்மாதமொன்றுக்கைந்து நாள்தான்பக்குவமா யிப்படியே மூன்றுமுறையுந்தானே. ௪௱௩

தானாகத்திருகின்றவியாதிகேளுதகைமையில்லாகுன்மமெட் டுஞ்சூதகத்துவாயு-மானாகதிமிர்த வாதங்குடலின்வாதம்மன்னவ னேபட்சமென்றவாதம்போகும் வானாகபத்தியந்தான்சொல்லக் கேளுவண்மையுள்ளபசும்பாலும்பசுநெய்யாகும்- தேனாகபசும்ப யறுவறுத்துப்பாகுந் தெளிவுடன்பத்தாநாள் விளக்கெண்ணெய் மூழ்கே ௪௱௪

*பட்சவாதம்-பாரிசவாயு

மூழ்கியபின்மதுபாணம்பெண்ணாகாதுமுக்கியதொண்ணூரு நாளாகுமட்டும்-மாழ்கியே போகதேமனம்விடாதேமதிகெட்டுநி ல்லாதேமருந்தேருது காழ்தபண்டந்தின்னாதேகாலைமாலைகாலா றநீநடந்துதிரும்பநன்று வாழ்த்துவார் போகருடகடாட் சத்தா லேவகையாகபுலிப்பாணிவசனித்தேனே ௪௱௫

ஆனைக்கால்தீரலேகியம்.

**வசனித்தேன்***கருங்குருவைமாப்படிகால்தன்வகையாகதிரு குகள்ளிபாலனாக்கால்-நசனித்த பசும்பால்தானனாக்காலாகும் நறுந்தேனும்படியனாக்கால்நவிலக்கேளு, தசனித்தமாதனிலேக லந்துக்கொண்டுதயவாகஅடுப்பேற்றிலேகியமாய்க்கிண்டி அகனி த்துஆறவிட்டுகல்லிலாட்டிஅப்பனேகலசமதில் பதனம்பண்ணே

* கருங்குருவை-கருப்பரிசி

பண்ணப்பாகழற்சிக்காயளவாய்க்கொள்ளு-பக்குவமாய்யை ந்துதினமிருநேரந்தான்-நண்ணப்பா இம்முறையாய்மூன்றுமாத ம்நன்மையுடன்கொள்வதற்குபத்தியங்கேள்-உண்ணப்பாநெய்பா ல்பசும்பயருகும்-உத்தமனேவறுத்தஉப்புமிகவுமாகும் கண்ணப் பாமறுபத்தியமிருந்துவிளக்கெண்ணையால்மூழ்கு கருணையுள்ள போகருடகடாட்சந்தானே. (சுகூஎ)

அர்த்தனுதிசுரமாத்திரை

தானென்ற*அர்த்தனுதிமாத்திரைனப்சொல்வேன்தனிவெ ள்ளைப்பாஷாணம் விராகனென்று,கோனென்ற கோரோசனை வி ராகனென்றுகொற்றவனே முலைப்பாலால் சாமமாட்டி பானெ ன்றபசும்பயற்போ லுண்டைசெய்துப்க்குவமாய் முலைப்பால்த ன்னிலீய-வானென்றபோகருடகடாட்சத்தாலே வண்மையுள்ள சுரம்நீங்கி*அர்த்தமாமே (சுகூஅ)

* அர்த்தம்-பாதி-ஆகையிலுவமானம்பொன்.

அர்த்தமென்றஇடமுலைப்பால்தன்னில்ஈந்தால்-அப்பனேஇ டபுறத்துசுரம்நீங்கியொருபுறமாய்நிற்கும்வார்த்தமென்ற இருமு லைப்பால்தந்தால்வகைக்கெட்டு சுரமதுதானுடனேநிற்கும்- கர்த் தனென்றுஉனைத்துதித்துலோகமெங்கும் - கால்விழுந்துகும்பிடு வார் கதிதாவென்று விர்த்தனென்ற போகருட கடாட்சத்தாலே விபரமுடன்புலிப்பாணி விரித்ததாமே. (சுகூகூ)

அமிர்தசஞ்சீவிமாத்திரை

ஆமென்றஅமிர்தசஞ்சீவிமாத்திரை அடவாகச்சொல்லுகி றேனப்பாகேளு-தாமென்றசாஸ்திரபேதியேலங் தனிகோஷ்டங் கிராம்புடனேசாதிபத்திரி - காமென்றசந்தனமுங்கடுகுரோகணி கனஇலுப்பைப்பூநன்னாறிவிலாமிச்சம்வேர்-வாமென்ற*இருவலி கடுக்காய்தான்றிவற்றல்நெல்லிதிப்பிலியுமதுரமாமே (சஎய)

* இருவேலி-வெட்டிவேர்

மதுரமென்றகிராட்சமொடுமூத்தக்காசு- மைந்தனேபேரீச் சங்காய்வகைக்கு-சதுரமென்றவிராகனெடைநிறுத்துக்கொண்டு சலியாமல்கல்வமிட்டு பழச்சாற்றாலே அதிரம்போலரைத்திடு வாய்சாமம்நாலு அப்பனேகடலைபோலுண்டைசெய்து நதிவரண் டுசுரமிஞ்சியதனமானநன்முலைப்பால்வெந்நீரிவியநன்றே. ()

நன்றாகுஞ்சன்னிமுதல்தோஷமெல்லாம் நன்மையாம் பிள் ளையிணிநலியுந்தீரும்-பன்றாகும் நாவரட்சிபறக்கும்பாரு பரிதிக ண்டபனிபோலாம்தசவுள்ளோர்க்- கன்றுதபத்தியமாய்க்காருகா ரு கதிகெட்டால்வியாதியதுகதித்துக்கொல்லும் - குன்றாகும் போகருட்கடாட்சத்தாலே குணமாகபுலிப்பாணிகூறினேனே.()

அக்கரசஞ்சிவிமாத்திரை.

கூறுவேன் அக்கரசஞ்சிவிமாத்திரைகுணம்பெறவே சொல்
லுகிறேன் குறிப்பாய்க்கேளும்- கோறுகிறேன் அதிமதுரங்கோ
ஷ்டஞ்சுக்குருணமுள்ளசாதிக்காய்*கொடுக்காய்சீரம்-ஊறுகிறல
வங்கப்பட்டை திப்பிலிமூலம் உத்தமனேகடுக்காயும் அசமதாக
ம் தேறுவேன் கொத்தமல்லிகஸ்தூரிமஞ்சள், திறமுள்ளபழம்பு
ளியுஞ்சீனிகாணே. (௬௭௩)

* அசமதாகம்-ஓமம் *கொடுக்காய்-கொடுக்காய்புளி

காணவே*அரத்தைரண்டுஇந்துபோடு கருஞ்சீரம் வகைவ
கைக்குவிராகனொன்று தேணவேமுலைப்பாலால் இரண்டுசாமந்
தொகுத்திடவேதாரைத்துவரைபோல மானவே வுண்டைசெய்
துநிழலுலர்த்தி மைந்தனேகுப்பியிலே அடைத்துக்கொண்டு-நா
ணவே நாவரட்சைகங்கைதோஷம் நலமில்லாசன்னிமுதல்சுரங்
கள்போமே (௬௭௪)

அரத்தைரண்டு-பேரரத்தை,சிற்றரத்தை,குப்பி,சீசபிட்டி

போகுமேமுலைப்பாலில் கொடுக்கநன்று புனிதமுள்ளஅநு
பானந்தன்னில்சுவாய். ஆகுமேபிள்ளைப்பிணிஅனந்தம்போகும்
அப்பனேபத்தியமாயிருக்கச்செய்து, பாகமாயேழுநாள்கொண்
டபின்னர்பாலகனேவாரம் நீரைவாரு, சேரகமாய்வியாதிகண்டு
மருந்தைசுவாய்சொற்பெரியபோகருடகடாட்சந்தானே (௬௭௫)

பிள்ளைகட்குபேதிமாத்திரை

தானென்றபிள்ளைகட்குவிரோசனந்தான்தயவாகச்சொல்லு
கிறேன்லவங்கமேலம், மானென்ற சன்னபட்டைமதுரங்கோஷ்
டம்மைந்தனேசண்பகத்தின்மொட்டுத்தானும், வானென்றவிரா
கனைநிறுத்துக்கொண்டு வாளமதுசுத்திசெய்து விராகனொ
ன்றுதேனென்றபழச்சாற்றால் மூன்றுசாமம் தெளிவாகத்தான
ரைத்துசெப்பக்கேளே (௬௭௬)

விரோசனம் பேதி மொட்டுமொக்கு

கேளப்பாமிளகதுபோல்குளிகைசெய்து-கெடியாகநிழலுல
ர்த்திசிமிழில்வைத்து, கோளப்பாஇல்லையடா சர்க்கரையாதல்
கொற்றவனேநல்லவெல்லங்கதலிதன்னில், நாளப்பாபிள்ளைபல
மறித்துநீயும்நன்மணியி லொன்றிரண்டுநல்கியப்பின், ஆளப்பா
மிளகுநீர்சாதமிவாய்அந்தியிலே சுக்குசீரகமுமாமே. (௬௭௭)
குளிகை,மாத்திரை,கதலி, வாழைப்பழம்(கட்டுவாதிமாத்திரை)

ஆமேதான்கியாழமிட்டுகொடுப்பாயப்பா அறையுறேன்கட்
டுவாதிதன்னைக்கேளு, தாமேதான்சாதிக்காய்சாதிபத்திரிதகமை
புள்ளமாசிக்காய் பூவும்நாமேதான்சீரகமும்விடையங்கிரும்புநல
முள்ளவெந்தயமும் அபினிதானும், கோமேதான் கசகசாவுங்
கோரோசினையுங்கொற்றவனே விராகனெடை நிறுத்துவாங்வே,
விடையம் அதிவிடையம்

வாங்கியேமுலைப்பாலால்அரைத்துநீயும்வண்மையுள்ள மிள கதுபோலுண்டைசெய்து தாங்கியேநிழலுலர்த்திபதனம்பண்ணு தாரணியில்கிராணிவகைஎல்லாம்போகஓங்கியேதேனதிலும் வெ ண்ணெயிலுங்கொள்ள ஓடிவிடும்பேதிமுதல்ரத்தக்கிராணிநீக்கில் லாப் போகருடகடாட்சத்தாலேதிறமாகபுலிப்பாணிதிறஞ்சொ ன்னேனே. (௬௭௯)

பச்சைகர்ப்பூரமாத்திரை.

சொன்னதொருபச்சைகர்ப்பூரமாத்திரைசொல்லுகிறேன் ப ச்சையென்ற கர்ப்பூரந்தான் மன்னென்ற வீரமுடன்பூரம்லிங்கம் மைந்தனே சூதமுடன்ரசசெந்தூரம் வின்னமில்லாசுத்திசெய்து வகைவகைக்குவிராகனெடைதானெடுத்துகல்வத்திட்டு அன்னன டைமின்னார்கள் காமப்பாலால் அப்பனே நாற்சாமம் அரைத்து வாங்கே. (௬௮௦)

காமப்பால் முலைப்பால்

வாங்கியேகுன்றுமணிபோலுருட்டிவண்மையுடநிழலுலர்த்தி வரிசைகேளு தீங்குற்றசூலைகரிகிரந்திதோஷம்தின்றிடவேஏழுநா ளில்தீர்ந்துபோகும்ஓங்கியேவந்துற்றசன்னிஓடும் ஒருநொடியில் சூடெழுந்துஓங்கிநிற்கும்பாங்குற்ற பத்தியங்களிச்சாபத்தியம் ப ண்பான போகருடகடாட்சந்தானே. (௬௮௧)

சிறுபிள்ளைகட்குகட்டுவாதிமாத்திரை.

தானென்றசாதிக்காய்தனைக்குடைந்து தன்மையுள்ளஅபினி பணவெடைதானிட்டு கோனென்றகுளவிந்த மறைத்துக்காய்மே ல்கொற்றவனே கவசமிட்டுகுணமதாக மானென்றவேதுபுடமாக விட்டுமைந்தனேகவசமதைமாற்றிப்பின்பு தேனென்ற முலைப்பா லால் அரைத்துமைபோல் தெளிவாக உழுந்தது போலுண்டை செய்யே. (௬௮௨)

குளவிந்தம்மஞ்சள்

செய்தஉண்டைதனையெடுத்துமுலைப்பால்தேனில்செயம்பெ றவேகொடுத்துவரதீரும்நோய்கேள்நொய்யவந்தரத்தகொட்டல் ரத்தபேதிநொடிக்குமுன்னே ஓடிவிடும்நோய்தீரும்பார் பய்யவந் தபேதிமுதல்கட்டுங்கட்டும்பக்குவமாய் பத்தியங்கள்பாகஞ் செய் வாய்ஐயனொனும்போகருடகடாட்சத்தாலே அன்பாகபுலிப்பாணி அருளினேனே. (௬௮௩)

இரத்தகொட்டலுக்கும்சீதபேதிக்கும்சூரணம்

அருளுவேன் கர்க்கடகசிங்கியப்பா அடவானகிராம்புடனே கருவாப்பட்டைஉருளவே பிரட்டிசிறுவறுப்பதாக்கி உத்தமனே வகைவகைக்குவிராகனென்றுமருளவே சூரணிவதுவைந்தா கே ளுமயக்கமில்லைஆறுபங்காய்செய்துகொண்டு குருவானபோகனை நீ தொழுதுயேத்தி கொடுத்துவிடு வெண்ணெயிலே குலைந்து போமே. (௬௮௪)

கர்க்கடகசிங்கிசடுக்காப்பூ
கருவாப்பட்டைலவங்கப்பட்டை

குழந்தைகளுக்குசுரதோஷங்களுக்குஅமிர்தசஞ்சீவிகுளிகை.

போமேதான் அமிர்தமென்ற குளிகைசொல்வேன் புகழுங்
கோரோசனையும்யேலந்தானுந்தாமேதான்அதிமதுரம் சண்பகப்
பூகலையானசாஸ்திரமாம்பேதியே.டுநாமேதான்வகைவகைக்குவி
ராகனென்று நலம்பெறவோகல்வத்தில்நன்றாயாட்டி ஆமேதான்
வெட்டிவேர்விலாமிச்சைவேரும்அடவாகக்கியாழமிட்டு அரைத்
திடாயே. (௪௮௫)

அரைத்திடுவா யிருசாமமானபின்பு அப்பனே குன்றியைப்
போலுண்டை.செய்துநிரைத்தனமாய்நிழலுலர்த்திநினைவாய்க்கே
ளுநீமகனேமுலைப்பாலில்நுணிக்குவைக்கில் உரைத்துவந்தமாந்த
மெட்டுநீர்ப்படுவன்றான் உத்தமனேஅஸ்திசுரம்வெப்புந்தீரும் ம
றைபுகழும்போகருடகடாட்சந்தானேமகிழ்வாகப்புலிப்பாணி ம
ணம்விட்டேனே. (௪௮௬)

சிறுபிள்ளைகளுக்குகாதில் சீப்வடிகிறதற்குரவிதயிலம்

விட்டதோர்கால்நண்டு விராகன்பத்துவெள்ளுள்ளிகுளவிந்
தம்விராகனைந்துதிட்டமுறவெள்ளைக்காக்கணஞ்சாற்றாலேதிறமா
கத்தானரைத்துதேங்காய்நெய்யில் சட்டமுடன்தான்பிசைந்து ர
விபில்வைத்துசாதகமாய்மூன்றுநாளானபின்பு இட்டமுடன்வடி
கட்டி யெடுத்துக் கொண்டு என்மகனே செவியிலிட சீழ்தான்
போமே. (௪௮௭)

சிறுபிள்ளைகள்பெருக்கநெய்

தானென்றுதேராதப்பிள்ளைகட்குதயவாகச்சொல்லுகிறேன்
தண்ணீர்மிட்டான்மானென்றசாரும்வெண்மறியின்பாலும்மைந்த
னேஆவின்பால் தேங்காய்பாலுந்தேனென்ற ஆவினெய் திறமாய்
வாங்கி தேசிகனேவகைவகைக்குபடிகாலப்பாகோனென்றசீனிய
துகற்கண்டோடுகொற்றவனேபலமைந்துகொண்டுசேரோ. ()

வெண்மறிவெள்ளாடு

சேர்ந்தபின்புஅடுப்பேற்றிதீயைமூட்டுசிறுக எரிமெழுகுபத
ஞ்சிவக்கும்போது கோத்தெடுத்துவடிகட்டிக் கொண்டுதானும்
கொற்றவனேகரண்டிவிதங்கொடுத்தாயானல் கார்த்திருந்தகண
ம்நீங்கிகரும்புபோலாம் கட்டழகும்பிள்ளைக்கு களையுமுண்டாம்
பூத்தமறைபோகருடகடாட்சத்தாலே புலிப்பாணிபுவிதனிலேபூ
ட்டினேனே (௪௮௯)

களை அழகு

குழந்தைகட்குவாந்திகண்டால்

பூட்டுகிறேன்குழந்தைகட்குவாந்திகண்டால் பூவென்றகிரா
ம்புமதிவிடையந்திப்பிலி நாடுகிறேன்மயிலிறகுசுட்டசாம்பல்நன்
றாகப்பொடிசெய்துதேனில்சேர்த்து ஊட்டவேவாந்தியது ஒழிந்
துபோகும்உண்மையிதுதவறாதுஉறுதிமெத்தஆட்டமிகுபோகரு
டகடாட்சத்தாலேஅன்பாகபுலிப்பாணிஅரைந்திட்டேனே. ()

குழந்தைகள்சிரங்குக்கு

அறையுறேனின்னமொருவெண்ணெயப்பா அனல்மீறி குழந்தைகட்கு அங்கமெல்லாம், நிறைபவே சொறிசிரங்குநின்றதானால் நீலவரமாயாமணக்கெண்ணெயோடு, மறையான மேனியுடன்மணித்தக்காளிமைந்தனேமுடக்கற்றான்வகைப்படிக்கால்,குறையாமல்மூக்குரட்டையரைத்தசாந்து கூட்டிடுவாய்எலுமிச்சம் பழத்தின்வாறே. (சகூந)

வாறுகக்காச்சிவடித்தெடுத்துக்கொண்டு வகையாகக்கரண்டிமுறைகொடுப்பாயப்பா, நேராகபத்தியந்தானிச்சாபத்தியம்நிச்சயமாயைந்துநாளேழுநாளாம்-சீராகத்தலைமுழுகிவருவாராகில்சிறுசிரங்கும்பெருசிரங்கும்நில்லாதோடும் -பேராகபோகருடகடாட்சத்தாலேபேசினேன்புலிப்பாணிபேசினேனே (சகூஉ)

சிரங்குக்குமேல்பூசுந்தயிலம்

பேசுகிறேன்மேல்பூசுந்தயிலமொன்றுபெரியாம்பல்கிழங்குடனேசெங்கரித்தாரி - மாசறவேனிடைக் கிடைதானெடுத்துக்கொண்டு மைந்தனே அவுரிச்சார் தன்னாலாட்டி- நாகமென்றுநிம்பயெண்ணெய்தன்னில்கூட்டி - நான்குநாள்பூசிவரசிரங்குபோகும்தேசிகனார்போகருடகடாட்சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே (சகூங)

பெரியாம்பல்அல்லிசெங்கத்தாரிசுருள்பட்டை

பிள்ளைபெறமாட்டாதவர்க்கு

பாடியேபிள்ளைவெளிகாணாதபேர்க்குபண்பானகிழ்க்காய்நெல்லிமூலம்,வாடியேபோகாமல்வளையமாட்டிவசமான இடக்கால்பெருவிரல்போட, நீடியேபிள்ளைவெளிகாணும்பப்பா நினைவாகஇன்னமொருவேரைக்கேளு, சூடியேமுன்னைவேர்தனையெடுத்து சுரபியெனும்பசுவின்பால்தனிலரைத்தே. (சகூச)

அரைத்தெடுத்துஉள்ளுக்குக்கொடுத்தால்பிள்ளை அப்பனேகீழ்விழுந்துஅழுகும்பாரு-மறைத்தபொருளென்று நீமயங்கவேண்டாம் மகாகோடிபுண்ணியங்களுனக்குண்டாகும்- துரைத்தனமாய்நீயலைந்து திரியவேண்டாம் தூய்யமெனும் நூல்களெல்லாந்துணிந்துபாருஉரைத்தகுருபோகருடகடாட்சத்தாலேஉரைத்திட்டேன்புலிப்பாணியுலகில்தானே (சகூரு)

கற்றாழைநாற்றந்தீரகூட்டு

உலகினிலேமானிடர்க்குகற்றாழைநாற்றம்ஓடிவிடசாந்தொன்றுஉரைக்கக்கேளு-நலநாரிகரந்தையுடவேருங்கூடநன்னாரிவேருடனேமுத்தக்காசுங்-குலமிலகுங் கஸ்தூரிமஞ்சள்தானுங் கூட்டியேவகைவகைக்குவிராகனெந்து, கலகமில்லையரைத்ததனைமுகட்டில்பூசக்கண்டோங்கற்றாழைநாற்றமெண்ணே (சகூசா)

நல்நாரி-சிவக்கரந்தைதலைப்பேனுக்குமரணம்

எண்ணவேதலையிலுள்ளபேன்கள்சாகஎடுத்துரைப்பேன் சூதமொருகழஞ்சிவாங்கி - நண்ணவேமேனியிற்சார்விட்டுஆட்டிநன்னூலில்தான்பிரட்டிநவிலக்கேளு-திண்ணவேசிகையில் சிக்கம்போல்சொருகசிரசிலுள்ளபேன்களெல்லாஞ் செத்துபோகும்கண்ணவேபோகருடகடாட்சத்தாலேகலையறிந்துபுலிப்பாணிகாட்டினேனே. (சகூஎ)

சூதம்-இரசம்.

காட்டினேன் முப்பூவேகலனில்லாமல் கண்டறிந்து செய்தொழிலில்கலந்துகொள்ள, நாட்டினேன்கபடொன்றுமில்லையப்பாநன்மையுடன்நீபாடநாதனென்பார்-பூட்டினேகெவன முதலிவிதிலேயாகும் புண்ணியனேவாதமொடுவைத்தியமாட - காட்டினேன்போகருடகடாட்சத்தாலேகனமாகப்புலிப்பாணி கலையில்தானே (சகூஎ)

கலையிலேபதினாறும்இருபத்தைந்துங்கனமான வைம்பதுநூறும்பாரு-நிலையிலேசண்முகத்தில் பூசைமார்க்கம் நீமகனேசாலபருநூறும்பாருமலையிலேபலதிரட்டு முன்னூறப்பா மைந்தனேசோதிடமுமுந்நூறப்பாகுலையிலேகொக்கோக முந்நூறுதானுங்குருவானபோகருடகடாட்சமாமே (சகூஅ)

வைத்தியர்க்குபுத்திக்கூறல்

ஆமேதான்பண்டிதரோயறையக்கேளு ஆதரையிலெளியோற்குஅவிழ்தமீந்து-தாமேதானன்னமிட்டு வஸ்திரமீந்து தயவாகதன்னுயிர்போலவரைக்காத்து நீமேதான்சோராமல் புண்ணியவானாய்- தீர்க்கமுள்ளவைத்தியனாய் இருந்துவாழ்வாய் நாமேதான்போகருடகடாட்சத்தாலேநலமாகப்புலிப்பாணி நவின்றிட்டோமே. (நூா)

வியாதியஸ்தனுக்குபுத்திகூறல்

நவின்றிட்டோம்புவிதனிலேவைத்தியமார்க்கம்நன்றாகசொல்லிவைத்தேனின்னூல்வேண்டும்பவின்றிட்டநோயாளர்வைத்தியோர்க்குபண்பாக தொழுதேற்றிதாம்வலமிந்து இவன்றிட்டமவையெல்லாமவர்க்குச்சொல்லிஇதம்பெறவேசெய்தபின்பு அவிழ்தங்கொள்வாய்கவின்றிட்டபோகருடகடாட்சத்தாலே காசினியில்புலிப்பாணியன்னூறுமுற்றே. (நூாக)

புலிப்பாணிமகாமுனிவர் அருளிச்செய்த

# வைத்தியம்-நூா

முற்றிற்று.

—*—